தினமணி

## தக்காளி வரத்து அதிகரிப்பு: விலை சரிவு

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வெளிமாநிலங்களில் இருந்து வரத்து அதிகரித்துள்ளதால் வியாழக்கிழமை முதல் தக்காளியின் விலை குறைந்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் முதல் தக்காளியின் விலை ஒரு கிலோ ரூ.35 வரை விற்கப்பட்டு வந்தது. தக்காளி பெரும்பாலும் கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் இருந்து கோயம்பேடு மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்பட்டு விற்கப்பட்டு வந்தது.

வழக்கமாக ஒரு நாளைக்கு 80 முதல் 100 லாரிகள் மூலம் கொண்டு வரப்படும் தக்காளி கடந்த சில மாதங்களாக 30 முதல் 40 லாரிகள் மூலம் மட்டுமே கொண்டு வரப்பட்டன. இதனால் தக்காளியின் விலை கடுமையாக உயர்ந்தது.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாக வெளி மாநிலங்களில் இருந்து தக்காளியின் வரத்து அதிகரித்துள்ளது. வியாழக்கிழமை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு 70 லாரிகள் மூலம் தக்காளி கொண்டு வரப்பட்டது. இதையொட்டி ஒரு கிலோ தக்காளி மொத்த விலையில் ரூ.7-க்கும், சில்லறை விலையில் ரூ.12 வரையிலும் விற்கப்பட்டது. இன்னும் சில தினங்களில் தக்காளியின் வரத்து அதிகரித்தால் மொத்த விற்பனையில் கிலோ ரூ.5-க்கு விற்பனை செய்யப்படும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

வெங்காயம் கிலோ ரூ.23: வெங்காயம் மகாராஷ்டிர மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்படுகிறது. வெங்காயத்தின் வரத்து நிலையாக இல்லாததால் விலை கடந்த சில வாரங்களாக ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகிறது. வியாழக்கிழமை மொத்த விலையில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.23-ம், சில்லறை விலையில் ஒரு கிலோ ரூ.30 வரையிலும் விற்கப்பட்டது.

காய்களின் விலை நிலவரம் (ஒரு கிலோ): கத்திரிக்காய் ரூ.18, கோஸ் ரூ.20, கருணை ரூ.22, உருளை ரூ.26, பீன்ஸ் ரூ.20, அவரை ரூ.16, பாகற்காய் ரூ.26, இஞ்சி ரூ.50, வெண்டை ரூ.20, மாங்காய் ரூ.50, பெங்களூர் கத்திரி ரூ.12, காலிஃப்ளவர் ஒன்று ரூ.15 முதல் 25 வரை.

**விவசாயிகள் பவர் டில்லர் வாங்க அரசு மானியம்**

சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மை பொறியல் துறை மூலம் மானிய விலையில் விவசாயிகளுக்கு பவர் டில்லர்கள் வழங்கப்படுகிறது. விவசாயத்தில் பவர் டில்லர் இயந்திரத்தின் பணி முக்கியமானதாகும். இதன் விலை ரூ. 1.30 லட்சத்திலிருந்து ரூ 1.50 லட்சம் வரை விற்பனை செய்யப்படுகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மை பொறியல் துறை மூலம் இந்த இயந்திரத்தை மானியத்தில் வழங்க அரசு ரூ 3 கோடி நிதி வழங்கியுள்ளது. மேற்கண்ட பவர் டில்லர் இயந்திரத்தை வாங்க விரும்பும் விவசாயிகளுக்கு ரூ 45 ஆயிரம் அரசு மானியம் வழங்கப்படுகிறது.

மானியத்தொகை போக மீதமுள்ள பங்களிப்புத் தொகையை ஈடு செய்ய விவசாயிகள் தங்கள் அருகிலுள்ள வங்கிகளை தொடர்புகொண்டு கடன் பெறலாம்.

பவர் டில்லர் இயந்திரத்தை வாங்க விரும்பும் விவசாயிகள் சிவகங்கையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்தை அணுகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உணவுப் பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல் பயிற்சி**

பந்தலூரை அடுத்த ஏலமண்ணாவில் பழங்குடியினர் மற்றும் மகளிர் குழுக்களுக்கான உணவுப் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் பயிற்சி வியாழக்கிழமை நடைபெற்றது .

இந்திய பயிர்ப் பதன தொழில்நுட்பக் கழகம் சார்பில் சி.டி.ஆர்.டி.அறக்கட்டளையின் பல்நோக்கு பயிற்சி மையத்தில் இப்பயிற்சி முகாம் நடைபெற்றது. சி.டி.ஆர்.டி.அமைப்பின் கூடுதல் இயக்குநர் ஆர்.விஜயராஜு தலைமை வகித்தார்.

கூடலூர் வேளாண் விற்பனைக் கழக அலுவலர்கள் எம்.ரமேஷ், எம்.லட்சுமணன் ஆகியோர் உணவுப் பாதுகாப்பு, பதப்படுத்துதல், பயிர்ப் பாதுகாப்பு, தர மேம்பாடு குறித்து விளக்கமளித்தனர்.

பெரிய நிறுவனங்களுக்கு இணையாக பழங்குடியினர் மற்றும் மகளிர் குழுக்கள் தயாரிக்கும் பொருள்களை சந்தைப்படுத்த வேண்டும் என்றனர். சி.டி.ஆர்.டி.பணியாளர்கள் பிரகாஷ் வரவேற்றார். ஸ்ரீஜா நன்றி கூறினார்.

பந்தலூர் வட்டத்தில் பழங்குடியினர், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகள், சிறு விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

**உரம் விற்பனையாளர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி**

இருப்பு மற்றும் விற்பனை விவரங்களை மத்திய அரசின் இணையத்துக்கு தெரிவிக்கும் வகையில், உரம் விற்பனையாளர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது.

நாடு முழுவதும் உரம் விற்பனையைக் கண்காணிக்கும் வகையில் மொபைல் உரக் கண்காணிப்பு அமைப்பு (எம்எப்எம்எஸ்) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசின் உரத் துறை சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த அமைப்புக்கு ட்ற்ற்ல்://ம்ச்ம்ள்.ய்ண்ஸ்ரீ.ண்ய் என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்துடன் நாடு முழுவதும் உள்ள அரசு மற்றும் தனியார் உரம் விற்பனையாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இந்த விற்பனையாளர்களுக்கு அரசு மற்றும் தனியார் உரம் நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் உரங்களின் ஒதுக்கீடு அளவு, வழங்கப்பட்ட உரங்களின் அளவு குறித்து கண்காணிக்க முதல்கட்டமாக எம்எப்எம்எஸ் முறை அறிமுகம் செய்யப்பட்டது.

இதன் மூலம் இருந்த இடத்தில் இருந்தே எந்தஎந்த நிறுவனங்களிடமிருந்து எந்தெந்த உர ம் விற்பனையாளர்களுக்கு எந்தெந்த உரங்கள் வந்துள்ளன என்பதை விவசாயிகளும், வேளாண்மைத் துறையினரும் தெரிந்து கொள்ள முடியும்.

இதன் தொடர்ச்சியாக உரம் விற்பனையாளர்கள் அனைவரும் இந்த இணையத்தில் பதிவுகளை ஏற்படுத்தி தங்களது நிறுவன விற்பனை, இருப்பு, வரவு விவரங்களைத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு ஒரு நிறுவனத்தை ஒருங்கிணைப்புப் பணிக்கு நியமனம் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் 132 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் உரம் விற்பனை செய்யப்படுகிறது. இவை தவிர 295 அங்கீகாரம் பெற்ற உரம் விற்பனை செய்யும் முகவர்களும் உள்ளனர். இவர்கள் அனைவருமே இணையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளித்து ஒருங்கிணைக்க கேபிஆர் நிறுவனத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த கேபிஆர் நிறுவனமும், தருமபுரி மாவட்ட

வேளாண்மைத் துறையும் இணைந்து உரம் விற்பனை செய்யும் முகவர்கள், கடைகளின் அலுவலர்களுக்கு புதன்கிழமை தொழில்நுட்ப பயிற்சி அளித்தனர்.

மாவட்டத்தில் உள்ள 8 ஒன்றியங்களைச் சேர்ந்தவர்களுக்கும் புதன், வியாழன் ஆகிய நாள்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இணையத்தில் சேரும் முறை, தங்களிடம் உள்ள உரங்களின் இருப்பு, விற்பனை, கொள்முதல் விவரங்களை செல்போன் மூலம் தெரிவிக்கும் விதம் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

தருமபுரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கூட்டரங்கில் புதன்கிழமை தொடங்கிய இந்தப் பயிற்சி வகுப்பை வேளாண்மை இணை இயக்குநர் கே. மனோகரன் தொடக்கி வைத்தார். உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) கே. கமலா, கேபிஆர் நிறுவனப் பொதுமேலாளர் வி. பிரேம்குமார், விற்பனை அதிகாரி டி.வீரப்பன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

**விவசாயத் தொழிலாளர்கள் சாலை மறியல்**

ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் பணியாற்றுவோருக்கு கூலி வழங்குவதில் பாகுபாடு காட்டக் கூடாது என்பதை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் சார்பு விவசாயத் தொழிலாளர் சங்கம் மற்றும் ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் நாகையை அடுத்த கருவேலங்கடையில் சாலை மறியல் போராட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. நாகை கருவேலங்கடை ஊராட்சி பகுதியில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களில் ஒரு பிரிவினருக்கு தினக் கூலியாக ரூ.132-ம், மற்ற பிரிவினருக்கு ரூ.100 முதல் ரூ.105 வரை வழங்கப்படுவதைக் கண்டித்தும், இந்த பாகுபாட்டை உடனடியாகக் கைவிடக் கோரியும் இந்தப் போராட்டம் நடைபெற்றது. மாதர் சங்க ஒன்றியச் செயலர் எஸ். தேவிகா, விவசாயத் தொழிலாளர் சங்கப் பொறுப்பாளர் ஜி. சங்கரய்யா ஆகியோர் தலைமை வகித்தனர். விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலர் வி. அமிர்தலிங்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை ஒன்றியச் செயலர் எம். சுப்பிரமணியன் உள்ளிட்டோர் பேசினர். கருவேலங்கடையில் நாகை- வேளாங்கண்ணி கிழக்குக் கடற்கரை சாலையில் சுமார் 1 மணிநேரம் மறியல் நடைபெற்றதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது. நாகை வட்டார வளர்ச்சி அலுவலர் சேகர் மற்றும் அலுவலர்கள் போராட்டக்

குழுவினருடன் பேச்சுவார்த்தையின்போது, இனிவரும் காலங்களில் எவ்வித குறையும் இல்லாமல் வேலை உறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அலுவலர்கள் தரப்பில் உறுதியளிக்கப்பட்டதால் மறியல் விலக்கிக் கொள்ளப்பட்டது.

**இலவச கால்நடை மருத்துவ முகாம்**

கீரிப்பாறையில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.

ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் கிராம வள மையம், நபார்டு வங்கியுடன் இணைந்து கிராம மேம்பாடு திட்டத்தின்கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து கீரிப்பாறையில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானி முகமது பிலால் பேசினார். கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் டி.ஏ. விஜயலிங்கம், உதவிப் பேராசிரியர் கே. கனகராஜதுரை ஆகியோர் கால்நடைகளுக்கு நோய்த் தடுப்பு மருந்துகளை வழங்கினர்.

ஏசுதாஸ், ஜெனோ, கீரிப்பாறை வார்டு உறுப்பினர் சேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வானிலை மாற்றம் கருத்தரங்கு**

கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், வேளாண் பட்டயப் படிப்பு மாணவர்களுக்கான வானிலை மாற்றம் குறித்த கருத்தரங்கு நடைபெற்றது.

தில்லி இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், அகில இந்திய வேளாண் வானிலை ஆராய்ச்சித் திட்டம் சார்பில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ஜவாஹர், ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பேராசிரியர் சோலைமலை, ஆராய்ச்சி நிலையத்தின் முதுநிலை ஆராய்ச்சியாளர் அசோக்குமார் ஆகியோர் பேசினர். இக் கருத்தரங்கில் வேளாண் பட்டயப் படிப்பில் பயிலும் 93 மாணவர்கள் கலந்து கொண்டனர். வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பேராசிரியை சுபலட்சுமி வரவேற்றார். குருசாமி நன்றி கூறினார்.

**டெல்டா பகுதிகளில் கர்நாடகம் ரகசிய ஆய்வு**

தமிழக டெல்டா பாசனப் பகுதிகளில் கர்நாடக அரசு தன்னிச்சையாக நியமித்த நிபுணர் குழுவினர் கடந்த 2-ம் தேதி ரகசிய ஆய்வு நடத்தியுள்ளனர். இந்தக் குழு நடத்திய ஆய்வின் முடிவு, டெல்டா பகுதிகளில் எடுத்த புகைப்படங்கள் உள்ளிட்டவை குறித்த ஆவணங்களை உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசு கடந்த 4-ம் தேதி தாக்கல் செய்துள்ளது.

"இந்த நடவடிக்கை, தமிழக அரசுக்குத் தெரியாமல் நடந்ததா? இது குறித்து ஏன் உச்ச நீதிமன்ற விசாரணையின்போது தமிழக அரசு வியாழக்கிழமை முறையிடவில்லை? என்ற கேள்விகள் எழுகின்றன.

இந்தக் குழு, தஞ்சாவூர், திருவாரூர், வேளாங்கண்ணி உள்ளிட்ட 10 இடங்களில் சுமார் 200 கி.மீ. பார்வையிட்டு தமிழகத்தின் பயிர்களின் நிலையை ஆய்வு செய்ததாகக் உச்ச நீதிமன்றத்தில் கர்நாடகம் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ளது. மேலும், செயற்கைக்கோள் உதவியுடன் தமிழகத்தின் டெல்டா பாசனப் பகுதிகளின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் உச்ச நீதிமன்றத்தில் கர்நாடகம் கூறியுள்ளது.

கடந்த 4-ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் காவிரி வழக்கு விசாரணைக்கு வந்தபோது, இதுவரை குறிப்பிடாத சில விவரங்களை அந்த மாநிலத்தின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் ஃபாலி நாரிமன் எடுத்துரைத்தார். அவர் வாதம் செய்வதற்கு இந்த நிபுணர் குழுவின் ஆய்வறிக்கைதான் அடிப்படையாக அமைந்ததாகக் கூறப்படுகிறது.

உச்ச நீதிமன்றத்தில் கர்நாடகத்தின் வழக்குரைஞர் வாதிடுகையில், ""தமிழகத்தில் 50 சதவீத சாகுபடி பரப்பில் அறுவடை முடிந்து விட்டது; 40 சதவீத பரப்பளவு நிலத்தில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் அறுவடைக்கு தயாராக உள்ளன. 10 சதவீத சாகுபடி பரப்புக்கு மட்டும் தண்ணீர் தேவைப்படுகிறது. ஆகையால் தமிழகம் கோரும் 12 டிஎம்சி நீர் திறந்துவிட வேண்டியதில்லை'' என்று குறிப்பிட்டார்.

முன்னதாக, "தமிழக சம்பா சாகுபடிக்கு உடனடியாக 12 டிஎம்சி நீர் தேவை' என்று வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் கடந்த ஜனவரி 17-ம் தேதி தமிழக அரசு மனு தாக்கல் செய்திருந்தது. ஆனால், "ஒரு சொட்டு நீர் கூட தர இயலாது' என்று அப்போது கர்நாடகம் கூறியது.

இந்நிலையில்தான், மத்திய நிபுணர் குழுவை நியமித்து தமிழக டெல்டா பகுதிகளில் ஆய்வு செய்ய உச்ச நீதிமன்றம் கடந்த 4-ம் தேதி உத்தரவிட்டது. ஆனால், அதற்கு முன்பாகவே ஒரு குழுவைக் கர்நாடக அரசு தமிழகத்துக்குத் தன்னிச்சையாக அனுப்பியுள்ளது.

காவிரி நீரைக் கடந்த ஜனவரி 22-ம் தேதி முதல் தமிழகம் பாசனத்துக்காகப் பயன்படுத்தவில்லை என்பதால், தமிழக நிலையை ஆராய ஒரு குழுவை அனுப்பலாம் என கர்நாடக மாநில நீர்வளத் துறைச் செயலர் டி. சத்யமூர்த்தியை அந்த மாநில நீர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமைப் பொறியாளர் எம். பங்காரஸ்வாமி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அதை ஏற்று பெங்களூர் வேளாண் அறிவியல் பல்கலைக்கழக பேராசிரியர்கள் நாகராஜு, திம்மே கௌடா, காவிரி நீரவாரி நிகாம் நிறுவனத்தின் தலைமைப் பொறியாளர் எம். ஷிவசாமி ஆகியோர் அடங்கிய குழுவை தமிழகத்தில் ஆய்வு செய்ய கர்நாடக அரசு நியமித்துள்ளது.

இந்தக் குழுவினர் கடந்த பிப்ரவரி 1-ம் தேதி தமிழகத்தில் உள்ள ஓசூரில் தமிழ்நாடு பதிவு எண் கொண்ட காரை வாடகைக்கு எடுத்துள்ளது. அந்த கார் மூலம் பெங்களூரில் இருந்து மாலை 5 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் அதிகாலை 3.30 மணிக்குத் தஞ்சாவூர் சென்றது.

அதைத் தொடர்ந்து, தஞ்சாவூர்-நீடாமங்கலம்-திருவாரூர்-வேளாங்கண்ணி-பேரளம்-கொல்லுமாங்குடி-திருநாகேஸ்வரம்-சூரியனார்கோயில்-கும்பகோணம்-தஞ்சாவூர் என மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே சுமார் 200 கிலோ மீட்டர் தூரம் சென்று ஆய்வு செய்தது.

செல்லும் வழியில் சில இடங்களில் வேளாண் நிலங்களில் பயிர்கள் அறுவடை செய்யப்பட்டு கட்டிவைக்கப்பட்டிருப்பது, சில இடங்களில் அறுவடை முடிந்து நிலம் பன்படுத்தப்பட்டு வருவது, சில இடங்களில் புதிதாக நாற்று நடப்பட்டு வருவது ஆகியவற்றையும் இந்தக் குழு புகைப்படங்கள் எடுத்துள்ளது.

பின்னர், பிப்ரவரி 3-ம் தேதி மாலை 4 மணிக்கு இந்தக் குழு பெங்களூர் திரும்பியது. அங்கிருந்து 4-ம் தேதி அதிகாலையில் இந்தக் குழு தில்லி வந்து அறிக்கையை அளித்துள்ளது.

அதில், "தமிழக டெல்டா பகுதிகளில் 40 சதவீத சாகுபடி பரப்பில் அறுவடை முடிந்துவிட்டது; 50 சதவீத பரப்பு அறுவடைக்குத் தயாராக உள்ளது; 10 சதவீத பரப்பு

சாகுபடிக்குத் தயாராக உள்ளது; அதனால், அறுவடைக்குத் தயாராக உள்ள பயிர்களுக்குத் தண்ணீர் தேவைப்படாது" என்று இந்தக் குழு மதிப்பிட்டுள்ளது.

மேற்கண்ட விவரங்கள் கர்நாடகம் உச்ச நீதிமன்றத்தில் கடந்த 4-ம் தேதி தாக்கல் செய்த மனுவில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

**தமிழகத்துக்கு 2.44 டிஎம்சி தண்ணீர்**

மத்திய நிபுணர் குழுவின் பரிந்துரையின்படி தமிழக சம்பா சாகுபடிக்கு காவிரி நதியில் இருந்து 2.44 டிஎம்சி நீரை திறந்துவிட கர்நாடகத்துக்கு உச்ச நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

தமிழகத்துக்கு எவ்வளவு நீர் திறந்துவிடப்படுகிறது என்பதை மேட்டூர் அணைக்கு வந்து சேரும் நீரின் அளவை குறியீடாகக் கொண்டு கணக்கிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. (வழக்கமாக, கர்நாடகம் திறந்துவிடும் காவிரி நீர், பில்லிகுண்டுலு பகுதியில் எவ்வளவு வந்து சேருகிறது என்பதை குறியீடாகக் கொண்டு கணக்கிடப்படும்).

ஆனால், "தமிழகத்தில் காவிரி டெல்டாவின் 10 சதவீத சாகுபடி பரப்பைக்கூட மத்திய நிபுணர் குழு பார்வையிடவில்லை. அதன் அறிக்கையில் உண்மை நிலை எடுத்துரைக்கப்படவில்லை. எனவே, அந்த அறிக்கையை நிராகரிக்க வேண்டும்' என்று தமிழக அரசின் சார்பில் மூத்த வழக்குரைஞர் சி.எஸ். வைத்தியநாதன் வாதிட்டார். ஆனால், அவரது வாதத்தை நீதிபதிகள் ஏற்கவில்லை.

அதையடுத்து பேசிய நீதிபதிகள், "மத்திய நிபுணர் குழு குறிப்பிட்டுள்ள பரிந்துரைகள் முழுவதும் தவறு என்றோ ஏற்றுக்கொள்ள முடியாதவை என்றோ ஒதுக்கிவிட முடியாது. குறுகிய அவகாசத்தில் நிபுணர் குழு ஆய்வு மேற்கொண்டுள்ளது.

அதன் அறிக்கை திருப்தி அளிக்கிறது. காவிரியில் இருந்து 2.44 டிஎம்சி நீரை கர்நாடகம் திறந்து விடுவதால், பெங்களூர் குடிநீர் தேவைக்கு பாதிப்பு ஏற்படாது' என்று நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

உத்தரவை கர்நாடகம் நிறைவேற்றும்: அதையடுத்து, "உச்ச நீதிமன்ற உத்தரவை கர்நாடகம் நிறைவேற்றும்' என்று அந்த மாநிலத்தின் சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் அனில் திவான் உறுதியளித்தார். அதை ஏற்று, வழக்கின் அடுத்தகட்ட விசாரணையை பிப்ரவரி 25-ம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

மேலும் சிக்கலாக்க வேண்டாம்: முன்னதாக, நீதிபதிகள் ஆர்.எம். லோதா, ஜஸ்தி செலமேஸ்வர், மதன் பி. லோகுர் அடங்கிய அமர்வு முன்னிலையில் வழக்கு விசாரணை தொடங்கியபோது, நீதிபதி ஆர்.எம். லோதா கூறியதாவது:

மத்திய நிபுணர் குழுவின் அறிக்கையை நீங்கள் (தமிழகம், கர்நாடகம்) படித்திருப்பீர்கள். நீதிமன்றத்தில் தவறான விவரங்களை குறிப்பிட்டு மனுக்களை தாக்கல் செய்தால் அதற்கான விளைவுகளை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் சந்திக்க நேரிடும்.

எனவே, இனியாவது இந்த விவகாரத்தில் புதிய மனுக்களை தாக்கல் செய்து பிரச்னையை மேலும் சிக்கலாக்க வேண்டாம்.

இப்படி கூறுவதால், நீங்கள் முன்வைக்கும் வாதங்கள் தவறானவை என்று கூறவில்லை. தமிழகத்தின் தேவை 2 முதல் 3 டிஎம்சி நீராக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டுதான் உடனடியாக 2 டிஎம்சி நீரை திறந்துவிட உத்தரவிட்டோம். நிபுணர் குழுவும் "2.44 டிஎம்சி நீர் திறந்தால் போதும்' என்று அறிக்கையில் கூறியுள்ளது.

ஒரே நாளில் தமிழக காவிரி டெல்டா பகுதிகளில் நேரில் ஆய்வு செய்து நிபுணர் குழு அறிக்கை தாக்கல் செய்துள்ளதை நீங்களும் பாராட்ட வேண்டும் என்று நீதிபதி லோதா கூறினார்.

உண்மை நிலையைக் கூறவில்லை: அதை ஏற்க மறுத்த தமிழக அரசின் மூத்த வழக்குரைஞர் சி.எஸ். வைத்தியநாதன், "நிபுணர் குழுவினர் டெல்டா பகுதியில் 10 சதவீத சாகுபடி பரப்பைக்கூட பார்வையிடவில்லை.

இதற்கான விடியோ ஆதாரம் எங்களிடம் உள்ளது. ஒருநாள் ஆய்வில் சம்பா சாகுபடிக்கு தேவைப்படும் நீரின் அளவை துல்லியமாகக் கணக்கிட முடியாது என்றும் அதே நிபுணர் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

டெல்டா பகுதிகளின் உண்மை நிலை அந்த அறிக்கையில் முழுமையாக எடுத்துரைக்கப்படவில்லை.

50 சதவீத சாகுபடி பரப்பளவில் அறுவடை முடிந்திருந்தால், விளைவிக்கப்பட்ட நெல் சந்தைக்கு வந்திருக்கும். இந்த விவகாரத்தில் கர்நாடகம் என்ன கூறி வருகிறதோ அதைத்தான் நிபுணர் குழுவும் கூறியுள்ளது.

முழுமையாக ஆராயாமல் மத்திய நிபுணர் குழு அளித்துள்ள அறிக்கையை தமிழகத்தால் ஏற்க இயலாது' என்றார்.

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு ஆட்சேபம் தெரிவித்து பதில் மனுவையும் அவர் தாக்கல் செய்தார்.

இவ்வளவு எதிர்ப்பை இதுவரை பார்த்ததில்லை: அவரது வாதத்தை ஏற்க மறுத்த நீதிபதி ஆர்.எம். லோதா, "20 ஆண்டுகளாக நீதிபதியாக பணியாற்றும் எனது அனுபவத்தில், ஒரு நிபுணர் குழுவின் அறிக்கையை இந்த அளவுக்கு எதிர்க்கும் போக்கை நான் பார்த்தது இல்லை' என்றார்.

அதைத் தொடர்ந்து நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக தமிழகம் தெரிவித்த கருத்துகளுக்கு கர்நாடக அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் அனில் திவான் ஆட்சேபம் தெரிவித்தார்.

அதையடுத்து, "காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிடுவது தொடர்பாக பிப்ரவரி 20-ம் தேதிக்குள் முடிவு எடுங்கள்' என்று நீதிமன்றத்தில் ஆஜராயிருந்த மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஹரேன் ராவலுக்கு நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

**மறு ஆய்வு மனு: கர்நாடகம் முடிவு?**

தமிழகத்துக்கு மேட்டூர் அணைக்கு வந்து சேரும் தண்ணீரைக் கணக்கிட்டு 2.44 டிஎம்சி நீரைத் திறந்துவிட வியாழக்கிழமை உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மறுஆய்வு செய்யக் கோரி மனு தாக்கல் செய்ய கர்நாடகம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக விவாதிப்பதற்காக கர்நாடக மாநில முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர், மாநில நீர் வளத்துறை அமைச்சர் பசவராஜ் பொம்மை ஆகியோர் பெங்களூரில் இருந்து வியாழக்கிழமை மாலையில் தில்லி வந்தனர்.

கர்நாடகம் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி வரும் மூத்த வழக்குரைஞர் ஃபாலி நாரிமனை அவரது இல்லத்துக்குச் சென்று அவர்கள் சந்தித்துப் பேசினர். சுமார் ஒன்றரை மணி நேரம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதுகுறித்து ஜெகதீஷ் ஷெட்டரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, ""கர்நாடக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடர் வெள்ளிக்கிழமை நடைபெறுவதால் அதில் மாநில அரசின் நிலை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்'' என்றார்.

ஃபாலி நாரிமனுடன் நடத்திய ஆலோசனையின்போது, தமிழகத்தின் மேட்டூர் அணைக்கு 2.44 டிஎம்சி நீரைக் கணக்கிட்டு வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு தொடர்பாக அவர்கள் ஆலோசனை நடத்தியதாகத் தெரிகிறது.

தமிழகம், கர்நாடகம் எல்லையில் அமைந்துள்ள பல்லிகுண்டுலுவை கணக்கிட்டு தண்ணீர் திறந்துவிடும் வகையில் உத்தரவை மாற்றிப் பிறப்பிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் மறுஆய்வு மனுவை தாக்கல் செய்வது குறித்து ஃபாலி நாரிமனுடன் ஜெகதீஷ் ஷெட்டர் விவாதித்ததாக கர்நாடக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோல, காவிரி நடுவர்மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட கர்நாடகம் ஆட்சேபம் தெரிவித்து வருவதால், சட்ட ரீதியாக அந்தக் கோரிக்கையை நீதிமன்றத்தில் வலியுறுத்தும் வாய்ப்புகளையும் ஜெகதீஷ் ஷெட்டர் ஆலோசித்ததாகக் கூறப்படுகிறது.

அவரிடம், ""காவிரி விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவுகளை கண்டிப்பாக கர்நாடகம் பின்பற்ற வேண்டும்; அதற்கான நடவடிக்கையை எடுங்கள்'' என்று ஃபாலி நாரிமன் அறிவுறுத்தியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கோழிகளை தாக்கும் புதிய நோய் தடுப்பூசி கண்டுபிடிக்கும் பணி தீவிரம்

சென்னை : கோழிகளை தாக்கும், புதிய நோய்க்கான, தடுப்பூசி கண்டுபிடிக்கும் பணியில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளது. இதற்கு, அரசு, 22 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. தமிழகத்தில், கோழி வளர்ப்பு அபரிமிதமாக வளர்ச்சியடைந்து வருகிறது. புழக்கடை கோழி வளர்ப்பாக மட்டுமே இருந்த, கோழி வளர்ப்பு, 30 ஆண்டுகளில், பெரிய தொழிலாக மாறியுள்ளது. கோழி வளர்ப்பு அதிகம் இருக்கும் ஊர்களான, கோவை, நாமக்கல், பல்லடம், ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில், கோழிகள், நச்சுயிரி நோய்களால், அதிகளவில், பாதிக்கப்படுகின்றன.

முன், வெள்ளை கழிச்சல், அம்மை நோய், சளி நோய் என, பலவித நோய்களால், கோழிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டன. பின், இந்நோய்களிலிருந்து கோழிகளை பாதுகாக்க, தடுப்பூசிகள் கண்டறியப்பட்டு, கோழிகளின் இறப்பு கணிசமாக குறைக்கப்பட்டது.

இந்நிலையில், சில ஆண்டுகளுக்கு முன், சிறிய மூச்சு குழல் அழற்சி நோயால், அதிகளவில், கோழிகள் பாதிக்கப்படுவது கண்டறியப்பட்டது. இந்நோயால் பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு, மூச்சுக் குழல் வீக்கம் ஏற்பட்டு, சுவாசிக்க சிரமம் ஏற்படுகிறது.

இதனால், முட்டை உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. இந்நோயால் பாதிக்கப்படும் கோழி குஞ்சுகள், மூச்சு குழலின் வீக்கத்தால், சுவாசிக்க முடியாமல், இறந்து விடுகின்றன. இந்நோயிலிருந்து, கோழிகளை பாதுக்கும் பொருட்டு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம், புதிய தடுப்பூசியை கண்டறியும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக, அரசு, 22 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. இதுகுறித்து, கால்நடை நல கல்வி மைய இயக்குனர் புருஷோத்தமன் கூறியதாவது: கோழிகளை தாக்கும் புதிய வகையான, நச்சுயிரியை கண்டறியும் பணி, மாதவரம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக, மத்திய ஆய்வு கூடத்தில் நடந்து வருகிறது. இந்த ஆய்வில், கால்நடை மருத்துவ நுண்ணுயிரியல் துறை விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட கோழியின், நுரையீரல், மூச்சு குழல் ஆகியவற்றிலிருந்து நச்சு கிருமியை பிரித்து எடுத்து, அதன் தன்மையறிந்து, ஏற்கனவே உள்ள கிருமியுடன் எவ்வாறு மாறுபட்டுள்ளது என்பதை கண்டறியும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.இவ்வாறு புருஷோத்தமன் கூறினார்.

**புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளில் குறையும் நீர்மட்டம்**

சென்னை:"எருக்கஞ்சேரி கழிவுநீரேற்று நிலையத்தில், நீர் மூழ்கி மோட்டார் பொருத்தும் பணி நடப்பதால், தொடர்புடைய, 12 கழிவுநீரேற்று நிலையங்கள், ஒரு நாள் செயல்படாது' என, சென்னை கழிவுநீர் அகற்று வாரியம் தெரிவித்துள்ளது.
இதுகுறித்து, வாரிய மேலாண் இயக்குனர் சந்தரமோகன் வெளியிட்ட அறிவிப்பு:சென்னை எருக்கஞ்சேரி கழிவுநீரேற்று நிலையத்தில், நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்தும் பணி, இன்று இரவு நடக்கிறது.

இதன் காரணமாக, மேம்பட்டை, வியாசர்பாடி ஏரி, எம்.கே.பி.நகர், தாமோதாரன் நகர், பெரம்பூர், ஏகாங்கிபுரம், செம்பியம், பெரியார் நகர், ஜவகர் நகர், திம்மசாமி தர்கா, புரசைவாக்கம் மற்றும் அயனாவரம் கழிவுநீரேற்று நிலையங்களின் செயல்பாடுகள், இன்று இரவு, 10:00 மணி முதல், நாளை இரவு, 10:00 மணி வரை நிறுத்தி வைக்கப்படும்.

மோட்டார் பொருத்தும் போது, ஆள்நுழைவு வாயில்களில் இருந்து வழிந்தோடும் கழிவுநீரை, லாரிகள் மூலம் தற்காலிகமாக அகற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. கழிவுநீர் பிரச்னை ஏற்பட்டால், பகுதி பொறியாளர்களை, 81449 30904 (பகுதி-4), 81449 30906 (பகுதி-6), 81449 30908 (பகுதி -8) என்ற, அலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில், தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட சிறப்பு கூட்டம் நடந்தது.
மாவட்ட மகளிர் அணி தலைவி பெருமா தலைமை வகித்தார். மாவட்ட பொது செயலாளர் சுந்தரேசன், பொருளாளர் சுப்பிரமணிரெட்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மகளிர் அணி செயலாளர் மணிமேகலை வரவேற்றார். மாநில பொதுச் செயலாளர் ராமகவுண்டர் கோரிக்கைகள் குறித்துப் பேசினார்.

"கறவை மாடுகளுக்கு இலவச இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். தமிழகத்தில், வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டுள்ளதால், மத்திய மற்றும் மாநில அரசுகள், விவசாய கடன்களை நிபந்தனையின்றி தள்ளுபடி செய்ய வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

மத்திய மாவட்ட செயலாளர்கள் ராஜேந்திரன், வெங்கடேசன், மேற்கு மாவட்ட தலைவர் வண்ணப்பன், கிழக்கு மாவட்ட தலைவர் தேவேந்திரன், அசோக்குமார், கிருஷ்ணன். மாவட்ட ஆலோசகர் நஜீர் அகமது உட்பட பலர் கலந்து கொண்டனர். ஜோதி கண்ணன் நன்றி கூறினார்.

**ஏல விவசாயிகள் - தொழிலாளர்கள் இன்று போனஸ் பேச்சுவார்த்தை**

கம்பம்; ஏல விவசாய சங்கங்களுக்கும், தொழிலாளர் சங்க பிரதிநிதிகளுக்கும் இடையே இந்த ஆண்டிற்கான, போனஸ் பேச்சுவார்த்தை இன்று காலை கம்பத்தில் நடக்கிறது. இடுக்கி மாவட்டத்தில், 1.5 லட்சம் ஏக்கரில் ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த தோட்டங்களில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பதிவு பெற்ற தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். இவர்களுக்கு கம்பெனி சட்டப்படி போனஸ், விடுமுறையுடன் கூடிய சம்பளம் உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும், மார்ச் மாதம் போனஸ் வழங்கப்படும். போனஸ் எவ்வளவு என்பதை ஏல விவசாய சங்க பிரதிநிதிகளும், தொழிலாளர் யூனியன் பிரதிநிதிகளும் பேசி முடிவு செய்வார்கள். கடந்த 2010 - 11 ல், அதிகபட்சமாக 25 சதவீதம் வழங்கப்பட்டது. ஆனால் அதற்கு அடுத்து 2011-12 ல் 16 சதவீதம் வழங்கப்பட்டது. இந்தாண்டிற்கான போனஸ் பேச்சுவார்த்தைகள் இன்று (08.02.13) காலை கம்பம் கேரள கார்டமம் குரோயர்ஸ் யூனியன் அலுவலகத்தில் துவங்குகிறது. இந்த பேச்சுவார்த்தையில் கேரள கார்டமம் குரோயர்ஸ் யூனியன், போடி கார்டமம் பிளான்டர்ஸ் அசோசியேசன், வண்டன்மேடு கார்டமம் குரோவர்ஸ் அசோசியேசன் உள்ளிட்ட பல விவசாய சங்கங்களும், சி.ஐ.டி.யூ., ஐ.என்.டி.யூ.சி., ஏ.ஐ.டி.யூ.சி., பி.எம்.எஸ்., உள்ளிட்ட பல தொழிற்சங்க பிரதிநிதிகளும் பங்கேற்கின்றனர். இந்த பேச்சுவார்த்தையின் முடிவுகளை லட்சக்கணக்கான ஏலத் தோட்ட தொழிலாளர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு "பவர் டில்லர்கள்' வழங்க அர" ரூ.3 கோடி ஒதுக்கீடு**

சிவகங்கை: ""விவசாயிகளுக்கு மானிய விலையில் "பவர் டில்லர்கள்' வழங்க அரசு ரூ.3 கோடி ஒதுக்கியுள்ளதாக," விவசாய பொறியியல் துறை செயற்பொறியாளர் ராஜகோபால் தெரிவித்தார். அவர் கூறியதாவது: தேசிய விவசாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு ரூ.45 ஆயிரம் மானியத்தில் வழங்கப்படுகிறது. மானியம் போக மீதமுள்ள பங்களிப்பு தொகையை, அருகில் உள்ள வங்கிகளில் கடனாக பெறலாம். இக்கருவி புழுதி, சேற்று உழவுக்கு சிறந்தது. வாழை மற்றும் கரும்பு பயிரின் ஊடே களையெடுக்கலாம். விவசாயிகள் தங்கள் பயன்பாடு போக, மற்ற விவசாயிகளுக்கு வாடகைக்கும் விடலாம். மானிய விலையில் "பவர் டில்லர்' வாங்க விரும்பும் விவசாயிகள், கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள விவசாய பொறியியல் துறை, செயற்பொறியாளர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.மேலும் விபரங்களை 04575 - 240 213ல் கேட்டு தெரிந்துகொள்ளலாம், என்றார்.

**நூறு நாள் வேலை திட்டத்தில் விவசாய பணிகள் கணக்கெடுப்பு**

காரைக்குடி: நூறுநாள் திட்ட பணியாளர்களை, விவசாய கூலி வேலைக்கு பயன்படுத்தும் வகையில், விவசாயிகளுக்கு தேவையான வேலையின் அளவு குறித்தும்,பணியாட்கள் குறித்தும் கணக்கெடுக்க வேளாண்மை துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும், நூறுநாள் வேலை திட்டத்திற்கு, கூலியாட்கள் வேலைக்கு சென்று விடுவதால், விவசாய பணிக்கு ஆட்கள் கிடைப்பதில்லை, என்ற குற்றச்சாட்டு நிலவி வருகிறது. இதையடுத்து, மத்திய அரசு நூறுநாள் திட்ட பணியாளர்களை, அந்தந்த மாநில தேவைக்கு ஏற்றாற்போல் பயன்படுத்திக் கொள்ளலாம், என சலுகை வழங்கியுள்ளது. இதனால், விவசாய பரப்பில், முட்புதர் நீக்குதல், தரை சமன்படுத்துதல், கால்வாய் வெட்டி கொடுத்தல், தென்னை, பழக்கன்று நட, குழி வெட்டுதல், பண்ணை குட்டை அமைத்து கொடுத்தல் ஆகியவற்றுக்குதேவைப்படும் கூலியாட்கள் எத்தனை பேர், எவ்வளவு பரப்புக்கு வேலை செய்ய வேண்டும், என விவசாயிகளிடம், வேளாண்மை துறை மூலம், கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. தேவைப்படும் பணியாளர்களை, கிராம சபை மூலம், அனுமதிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது: விவசாயத்தை பெருக்கும் வகையில், நூறுநாள் திட்ட பணியாளர்களை, விவசாய வேலையில் ஈடுபடுத்த முதற்கட்ட கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இந்த

பணியாளர்களை, நடவு, அறுப்பு, களையெடுத்தல், நீர் பாய்ச்சுதல் உள்ளிட்ட மற்ற வேலைகளுக்கு, பயன்படுத்த கூடாது. இதற்கான சம்பளம் குறித்த வரையறை இதுவரை குறிப்பிடப்படவில்லை.

**வேளாண் விஞ்ஞானிகள் கருத்து பரிமாற்ற நிகழ்ச்சி**

அம்பாசமுத்திரம்:அம்பாசமுத்திரத்தில், வட்டார வேளாண்மை தொழில் நுட்ப முகமையும், நெல் ஆராய்ச்சி நிலையமும் இணைந்து விவசாயிகள் - வேளாண் விஞ்ஞானிகள் கருத்து பரிமாற்ற நிகழ்ச்சி இரண்டு நாட்கள் நடத்தின.

அம்பாசமுத்திரம் வேளாண் கோட்ட உதவி இயக்குனர் சுந்தரம் தலைமை வகித்தார். அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய தலைவர் கோமதிநாயகம், அட்மா தலைவர் சங்கரன் முன்னிலை வகித்தனர். நெல் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ஆறுமுகசாமி வரவேற்றார்.

வேளாண்மை அலுவலர் பரமசிவன், துணை வேளாண்மை அலுவலர் தவசி, உதவி வேளாண்மை அலுவலர் ஆறுமுகம், நெல் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ரஜினிமாலா, பூச்சியல் துறை உதவி பேராசிரியர் இளஞ்செழியன், மண்ணியல் துறை பேராசிரியர் கோபாலகிருஷ்ணன் பேசினர்.

மானிய திட்டங்கள், தொழில் நுட்பங்கள், நோய் தாக்கும் வழிகள், அதனை களையும் முறைகள், உரமிடுதல் குறித்து விளக்கி கூறப்பட்டது. இரண்டாம் நாள் கள ஆய்வு நடந்தது.

ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் சுஜீத், தொழில் நுட்ப வல்லுநர்கள் செல்வகணேஷ், புஷ்பமாரி செய்திருந்தனர்.

**விவசாயிகள் வாங்கியுள்ள கூட்டுறவு கடன்களின் வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும் உழவர் உழைப்பாளர் கட்சி கூட்டத்தில் தீர்மானம்**

பொங்கலூர்,

விவசாயிகள் வாங்கி யுள்ள கூட்டுறவு கடன் களின் வட்டி முழு வதையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பொங்கலூரில் நடைபெற்ற உழவர் உழைப்பாளர் கட்சி கூட் டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

<u>மாநாடு</u>

காய்ந்து போன பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலி யுறுத்தி பொங்கலூரில் உழவர் உழைப்பாளர் கட்சியின் பேரணி மற்றும் மாநாடு லட்சுமி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. மாநில ஆலோ சகரும், மாவட்ட தலைவரு மான கே.சி.எம்.பாலசுப்பிர மணியம் தலைமை தாங்கி னார். மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, ஒன்றிய பொருளாளர் சுப்பிரமணியம், மாவட்ட இளைஞரணி தலை வர் சோமசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொங் கலூர் ஒன்றிய செயலாளர் நடராஜன் வரவேற்று பேசி னார்.

கூட்டத்தில் கட்சியின் மாநில தலைவர் செல்லமுத்து, திரைபட நடிகரும், இயக்குன ருமான தங்கர்பச்சான் ஆகி யோர் சிறப்புரையாற்றினார் கள். மாநில தலைவர் செல்ல முத்து பேசும்போது கூறிய தாவது:

வறட்சி காரணமாக விவ சாயிகள் தாங்கள் வாங்கியுள்ள கடனை கட்ட முடியாமல் தவித்து வருகிறார்கள். வாழவே வழியில்லாத நிலை யில் வறுமையில் வாடிவரு கிறார்கள். இந்த நிலையில் வங்கிகளில் இருந்து ஜப்தி நடவடிக்கை எடுக்க அதி காரிகள் வருவதாக பலர் தெரிவித்தனர். அவ்வாறு வந்தால் அந்த அதிகாரிகளை சிறைபிடித்து வைத்துக் கொண்டு எங்களுக்கு தகவல் கொடுங்கள். எங்கள் மீது வழக்கு போட்டாலும் பரவா யில்லை. தமிழகம் முழுவதும் வறட்சி காணப்படுகிறது. குறிப்பாக கொங்கு மண் டலத்தை வறட்சி பாதித்த பகுதியாக அறிவித்து வறட்சி நிவாரண பணிகளை உடனே தொடங்க வேண்டும்.

இவ்வாறு செல்லமுத்து பேசினார்.

தங்கர்பச்சான்

மாநாட்டில் திரைப்பட இயக்குனர் தங்கர்பச்சான் பேசும்போது கூறியதாவது:

திருப்பூர் ஏற்றுமதியை நினைத்து பெருமைபட்டுக் கொண்டீர்களே. இன்று நிலை என்ன?. சாயக்கழிவு நீரால் மண்வளம், நீர் வளம் முற்றிலும் கெட்டுவிட்டது. கழிவுகளை எல்லாம் தன்னுள் வாங் கிக்கொண்டு பூமி எத்தனை சுவையான பழங்கள், காய் கறிகளை தருகிறது. இதை நாம் பாழ்படுத்தலாமா?. இந்தியா வின் முதுகெலும்பு விவசாயம் என்றார்கள். ஆனால் இன்று விவசாயம் முற்றிலும் பாதிக் கப்பட்டுவிட்டது. அப்படி யானால் முதுகெலும்பு இல்லாத இந்தியா எப்படி எழுந்து நிற்க முடியும். விவசாய சம்பந்த மான படம் எடுத்தால் நடிக்க வர பயப்படுகிறார்கள். விவ சாயிகளின் கஷ்டத்தை சொல்ல நான் நஷ்டப்பட்டா லும் பரவாயில்லை என்று தான் படம் எடுக்கிறேன். இங்கு வந்துள்ளதன் நோக்கமே உங்களை எல்லாம் ஒன்று படுத்தத்தான். அதற்கு உங்கள் ஆதரவு தேவை. இவ்வாறு தங்கர்பச்சான் பேசினார்.

தீர்மானம்

கூட்டத்தில் நிறைவேற் றப்பட்ட தீர்மானங்கள் வரு மாறு:

மழை பெய்து காலம் செழிக்கின்ற வரை விவ சாயிகள் உயிருடன் தாக்குப் பிடிக்க மாதம் ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும். அனைத்து கூட்டுறவு மற்றும் வங்கி கடன்களின் வட்டி முழுவதை யும் தள்ளுபடிசெய்து, அசலை செலுத்த காலநீட்டிப்பு வழங்க வேண்டும். கால்நடை தீவ னங்களை பிற மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்கவேண்டும். அரசு சார்பு நிறுவனங்கள் கொப்பரைக்கு பதில் மட்டை நீக்கிய தேங்காயாக கொள் முதல் செய்ய வேண்டும். மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.10 ஆயிரமும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரமும் வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர் மானங்கள் நிறைவேற்றப்பட் டன.

கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் திருநாவுக்கரசு, பொருளாளர் பாலசுப்பிர மணியம், கொள்கை பரப்பு செயலாளர் ஈட்டிமுனை குப்புசாமி, திருப்பூர் மாநகர செயலாளர் ஜீவா கிட்டு, ஒன் றிய பிரசார குழு தலைவர் மகாலிங்கம், ஒன்றிய இளை ஞரணி ஜெகநாதன், மாவட்ட பொருளாளர் வெங்கடாசலம் உள்பட பலர் கலந்து கொண் டனர். முடிவில் ஒன்றிய மாண வரணி தலைவர் விஜயகுமார் நன்றி கூறினார்.

**திருப்பரங்குன்றம் பகுதியில் கத்தரி விவசாயம் பாதிக்கப்படுவது ஏன்? வேளாண்மை துறையினர் தோட்டங்களுக்கு சென்று ஆய்வு**

**மதுரை**

திருப்பரங்குன்றம் பகுதியில் கத்தரி விவசாயம் பாதிக்கப்படுவது ஏன் என்பதை கண்டறிய வேளாண்மை துறையினர் தோட்டங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

<u>கத்தரி விவசாயம்</u>

திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் வடிவேல்கரை, புதுக்குளம், கீழக்குயில்குடி ஆகிய பகுதிகளில் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் கத்தரி பயிரிட்டு உள்ளனர். அந்த கத்தரி செடிகள் வளர்ந்து வந்த பருவத்தில் நோய் தாக்கியது. சரியாக பூக்காமல், காய்க்காமல் இருந்ததால் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்தனர். இதுபற்றி வேளாண் அதிகாரிகளுக்கு புகார் செய்தனர். விவசாயிகள் வாங்கிய விதைகள் சரியில்லாததுதான் காரணம் என்றும் சொல்லப்பட்டது. யூனியன் கூட்டத்திலும் கவுன்சிலர் நாகராஜன் இதுகுறித்து பேசினார்.

இந்த நிலையில் திருப்பரங்குன்றம் பகுதியில் மட்டும் கத்தரி ஏன் பாதிக்கப்பட்டு உள்ளது என்பதை கண்டறிய வேளாண் அதிகாரிகள் ஆய்வுப் பணியை மேற்கொண்டனர். மதுரை வேளாண்மை கல்லூரி விஞ்ஞானி சங்கரலிங்கம், பயிர் வேளாண்மை துறை தலைவர் ஆறுமுகம், பேராசிரியர்கள் மணிசேகரன், பாலகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் விஜயகுமார் டேனியல், தோட்டக்கலை அலுவலர் முருகேசன், தோட்டக்கலைத் துறை உதவி அலுவலர்கள் சலீம்ராஜ், பாலகிருஷ்ணன் மற்றும் ஊழியர்கள் நேற்று பல்வேறு ஊர்களில் உள்ள தோட்டங்களுக்குச் சென்று ஆய்வு செய்தனர்.

பின்னர் அவர்கள் கூறியதாவது:–

இந்த பகுதி கத்தரி செடிகளில் ஏற்பட்ட பாதிப்பு விதையினால் வந்தது அல்ல. போதிய மழை பெய்யாததாலும், அதிக வெப்பம் காரணமாகவும் கத்தரி செடிகளை சிற்றிலை என்ற நோய் தாக்கியுள்ளது. இதற்கு வேளாண் அதிகாரிகள் பரிந்துரைக்கும் மருந்தை வாங்கி தெளிக்க வேண்டும்.

ஒரு கத்தரி செடியில் நோய் தாக்கியது தெரியவந்தால் உடனே அந்த செடியை அடியோடு பிடுங்க வேண்டும். அப்படி பிடுங்கப்பட்ட செடிகளை அருகில் போடாமல் தூரத்தில் கொண்டுபோய் போட வேண்டும். இவ்வாறு செய்தால்தான் நோய் மேலும் பரவாமல் தடுக்க முடியும்.

பொதுவாக விவசாயிகள் தங்கள் நிலங்களில் ஒரே பயிரை தொடர்ந்து பயிரிட்டு வருகிறார்கள். வெவ்வேறு பயிர்களை சுழற்றி முறையில் பயிர் செய்யவேண்டும். அப்படி செய்ததால்தான் நிலம் செழுமையாக இருக்கும். அதில் வளரும் செடிகளும் நல்ல பலனை தரும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு திறக்கப்பட்ட தண்ணீர் 2 ஆயிரம் கனஅடியாக குறைப்பு நீர் இருப்பு 7 டி.எம்.சி.யாக குறைந்தது**

சேலம்

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு 2 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. மேலும் அணையின் நீர் இருப்பு 7 டி.எம்.சி.யாக குறைந்தது.

<u>சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு</u>

கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடக்கோரி தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தது. அந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், மேட்டூர் அணையில் இருந்து உடனடியாக 2 டி.எம்.சி. தண்ணீரை திறந்து விட்டு தமிழகத்தில் பயிர் செய்யப்பட்டு உள்ள சம்பா பயிர்களை காப்பாற்ற வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

அதேநேரத்தில், குறிப்பிட்ட கால இடைவெளிக்குப்பிறகு கர்நாடகத்தில் இருந்து 2.5 டி.எம்.சி. தண்ணீரை தமிழகத்திற்கு திறந்து விட வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். சுப்ரீம் கோர்ட்டு உத்தரவை ஏற்று தமிழக அரசு கடந்த 4–ந் தேதி இரவு முதல் மேட்டூர் அணையில் இருந்து வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீரை திறந்து விட்டது.

<u>தண்ணீர் திறப்பு குறைப்பு</u>

இந்த தண்ணீர் திறப்பின் காரணமாக டெல்டா பாசன விவசாயிகள் கருகிய நிலையில் உள்ள தங்கள் பயிர்களுக்கு போதுமான அளவு தண்ணீர் கிடைக்கவில்லை என்றாலும், ஓரளவு தண்ணீரை பயன்படுத்தி பயிர்களை காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் நேற்று மாலையுடன் டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பதை நிறுத்தி இருக்க வேண்டும். இதற்கு பதிலாக நேற்று காலை 10 மணி முதல் பாசனத்துக்கு திறந்து விடப்படும்

தண்ணீரின் அளவு வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடியாகவும், பிற்பகலில் வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடியாகவும் குறைக்கப்பட்டு உள்ளது.

7 டி.எம்.சி.யாக குறைந்தது

டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால், கடந்த 4–ந் தேதி 9 டி.எம்.சி.யாக இருந்த மேட்டூர் அணையின் நீர் இருப்பு தற்போது 7 டி.எம்.சி.யாக குறைந்து விட்டது. இந்த நிலையில் தொடர்ந்து மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டால், குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவும் அபாயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

நேற்று மாலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 30 அடியாக குறைந்தது. அணைக்கு வினாடிக்கு 179 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

**விவசாயிகள் வாங்கியுள்ள கூட்டுறவு கடன்களின் வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும் உழவர் உழைப்பாளர் கட்சி கூட்டத்தில் தீர்மானம்**

பொங்கலூர்,

விவசாயிகள் வாங்கி யுள்ள கூட்டுறவு கடன் களின் வட்டி முழு வதையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பொங்கலூரில் நடைபெற்ற உழவர் உழைப்பாளர் கட்சி கூட் டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

மாநாடு

காய்ந்து போன பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலி யுறுத்தி பொங்கலூரில் உழவர் உழைப்பாளர் கட்சியின் பேரணி மற்றும் மாநாடு லட்சுமி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. மாநில ஆலோ சகரும், மாவட்ட தலைவரு மான கே.சி.எம்.பாலசுப்பிர மணியம் தலைமை தாங்கி னார். மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, ஒன்றிய பொருளாளர் சுப்பிரமணியம், மாவட்ட இளைஞரணி தலை வர் சோமசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொங் கலூர் ஒன்றிய செயலாளர் நடராஜன் வரவேற்று பேசி னார்.

கூட்டத்தில் கட்சியின் மாநில தலைவர் செல்லமுத்து, திரைபட நடிகரும், இயக்குன ருமான தங்கர்பச்சான் ஆகி யோர் சிறப்புரையாற்றினார் கள். மாநில தலைவர் செல்ல முத்து பேசும்போது கூறிய தாவது:

வறட்சி காரணமாக விவ சாயிகள் தாங்கள் வாங்கியுள்ள கடனை கட்ட முடியாமல் தவித்து வருகிறார்கள். வாழவே வழியில்லாத நிலை யில் வறுமையில் வாடிவரு கிறார்கள். இந்த நிலையில் வங்கிகளில் இருந்து ஜப்தி நடவடிக்கை எடுக்க அதி காரிகள் வருவதாக பலர் தெரிவித்தனர். அவ்வாறு வந்தால் அந்த அதிகாரிகளை சிறைபிடித்து வைத்துக் கொண்டு எங்களுக்கு தகவல் கொடுங்கள். எங்கள் மீது வழக்கு போட்டாலும் பரவா யில்லை. தமிழகம் முழுவதும் வறட்சி காணப்படுகிறது. குறிப்பாக கொங்கு மண் டலத்தை வறட்சி பாதித்த பகுதியாக அறிவித்து வறட்சி நிவாரண பணிகளை உடனே தொடங்க வேண்டும்.

இவ்வாறு செல்லமுத்து பேசினார்.

<u>தங்கர்பச்சான்</u>

மாநாட்டில் திரைப்பட இயக்குனர் தங்கர்பச்சான் பேசும்போது கூறியதாவது:

திருப்பூர் ஏற்றுமதியை நினைத்து பெருமைபட்டுக் கொண்டீர்களே. இன்று நிலை என்ன?. சாயக்கழிவு நீரால் மண்வளம், நீர் வளம் முற்றிலும் கெட்டுவிட்டது. கழிவுகளை எல்லாம் தன்னுள் வாங் கிக்கொண்டு பூமி எத்தனை சுவையான பழங்கள், காய் கறிகளை தருகிறது. இதை நாம் பாழ்படுத்தலாமா?. இந்தியா வின் முதுகெலும்பு விவசாயம் என்றார்கள். ஆனால் இன்று விவசாயம் முற்றிலும் பாதிக் கப்பட்டுவிட்டது. அப்படி யானால் முதுகெலும்பு இல்லாத இந்தியா எப்படி எழுந்து நிற்க முடியும். விவசாய சம்பந்த மான படம் எடுத்தால் நடிக்க வர பயப்படுகிறார்கள். விவ சாயிகளின் கஷ்டத்தை சொல்ல நான் நஷ்டப்பட்டா லும் பரவாயில்லை என்று தான் படம் எடுக்கிறேன். இங்கு வந்துள்ளதன் நோக்கமே உங்களை எல்லாம் ஒன்று படுத்தத்தான். அதற்கு உங்கள் ஆதரவு தேவை. இவ்வாறு தங்கர்பச்சான் பேசினார்.

<u>தீர்மானம்</u>

கூட்டத்தில் நிறைவேற் றப்பட்ட தீர்மானங்கள் வரு மாறு:

மழை பெய்து காலம் செழிக்கின்ற வரை விவ சாயிகள் உயிருடன் தாக்குப் பிடிக்க மாதம் ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும். அனைத்து கூட்டுறவு மற்றும் வங்கி கடன்களின் வட்டி முழுவதை யும் தள்ளுபடிசெய்து, அசலை செலுத்த காலநீட்டிப்பு வழங்க வேண்டும். கால்நடை தீவ னங்களை பிற மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்கவேண்டும். அரசு சார்பு நிறுவனங்கள் கொப்பரைக்கு பதில் மட்டை நீக்கிய தேங்காயாக கொள் முதல் செய்ய வேண்டும். மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.10 ஆயிரமும், கரும்புக்கு டன்

ஒன்றுக்கு ரூ.4 ஆயிரமும் வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர் மானங்கள் நிறைவேற்றப்பட் டன.

கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் திருநாவுக்கரசு, பொருளாளர் பாலசுப்பிர மணியம், கொள்கை பரப்பு செயலாளர் ஈட்டிமுனை குப்புசாமி, திருப்பூர் மாநகர செயலாளர் ஜீவா கிட்டு, ஒன் றிய பிரசார குழு தலைவர் மகாலிங்கம், ஒன்றிய இளை ஞரணி ஜெகநாதன், மாவட்ட பொருளாளர் வெங்கடாசலம் உள்பட பலர் கலந்து கொண் டனர். முடிவில் ஒன்றிய மாண வரணி தலைவர் விஜயகுமார் நன்றி கூறினார்.

**அவினாசி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.1 கோடிக்கு பருத்தி ஏலம்**

அவினாசி,

அவினாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற் பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்திற்கு 7 ஆயிரம் மூடை பருத்தி வந்திருந்தது. இது கடந்த வாரத்தை காட்டி லும் 500 மூடைகள் அதிகம் ஆகும். 600 விவசாயிகளும், 20 வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.

ஏலத்தில் டி.சி.எச். ரகம் குவிண்டால் ரூ.4800 முதல் ரூ.5250 வரையிலும், ஆர்.சி.எச்.ரகம் ரூ.3900 முதல் ரூ.4450 வரையிலும், எல்.ஆர்.ஏ. ரகம் ரூ.3700 முதல் ரூ.3900 வரையிலும், மட்டம் ரூ.1700 முதல் ரூ.2300 வரை யிலும் வியாபாரிகள் ஏலத்தில் எடுத்தனர். ஏலத்தின் மொத்த மதிப்பு ரூபாய் ஒரு கோடியே 10 லட்சம் ஆகும்.

இந்த தகவலை சங்க நிர்வாகி கள் தெரிவித்தனர்.

**வேலூர் மாவட்டத்தில் வேளாண்மை துறை சார்பில் கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி முகாம் கலெக்டர் தகவல்**

வேலூர்,

வேலூர் மாவட்டத்தில் வேளாண்மை துறை சார்பில் கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி முகாம் நடக்கிறது என்று கலெக்டர் சங்கர் தெரிவித்து உள்ளார்.

இதுகுறித்து கலெக்டர் சங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

<u>இளைஞர்களுக்கு பயிற்சி</u>

தமிழக அரசு வேளாண் பண்ணைகளை இயந்திரமயமாக்கும் விதத்தில் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கிராமப்புறத்தில் வசிக்கும் இளைஞர்களுக்கு நவீன வேளாண் இயந்திரங்கள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்த பயிற்சி வேளாண்மை பொறியியல் துறை மூலம் இலவசமாக வழங்கப்படுகிறது.

வேலூர் மாவட்டத்தில் 50 கிராமப்புற இளைஞர்களுக்கு இந்த பயிற்சி வழங்கப்பட உள்ளது. பயிற்சி கலந்து கொள்பவர்களுக்கு உணவு, ஊக்கத்தொகை மற்றும் பயிற்சி முடிந்து செல்லும் போது உபகரணங்கள் ஆகியவை வழங்கப்படும்.

8–ம் வகுப்பு தேர்ச்சி

பயிற்சி காலம் 3 மாதம் ஆகும். இந்த பயிற்சி வேலூரில் உள்ள அரசு இயந்திர கலப்பை பணிமனையில் வழங்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் கிராமப்புற இளைஞர்கள் 8–ம் வகுப்பு தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். 35 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

விருப்பமுள்ள கிராமப்புற இளைஞர்கள் வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர், வேலூர், அல்லது உதவி செயற்பொறியாளர், அரசு இயந்திர கலப்பை பணிமனை மற்றும் வேலூர் உட்கோட்ட உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரை தொடர்பு கொண்டு வருகிற 10–ந் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

அடுத்த வாரம் இறுதியில் இந்த பயிற்சி தொடங்கப்படுகிறது, எனவே, கிராமப்புற இளைஞர்கள் விரைவில் விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் அழகிய மலர் செடி நாற்றுக்கள் விற்பனைக்கு தயார் உதவி இயக்குனர் தகவல்**

ஊட்டி,

ஊட்டி அரசு தாவரவி யல் பூங்காவில் அழகிய மலர் நாற்றுக்கள் விற் பனைக்கு உள்ளதாக தோட்டக்கலை உதவி இயக்குனர் டாக்டர் ராம் சுந்தர் தெரிவித்து உள்ளார்.

தனியார் விடுதி

ஊட்டி தாவரவியல் பூங்கா தோட்டக்கலை உதவி இயக்குனர் டாக்டர் ராம்சுந்தர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:– நீலகிரி மாவட்டத்தில் வர போகின்ற கோடை விழா வினை முன்னிட்டும், மலர் காட்சியில் அழகு தோட்டங் களின் போட்டிகள் நடைபெற இருக்கின்றது. மேலும், வீட்டு தோட்டங்கள், தனியார் நிறு வனங்கள், விருந்தினர் விடுதி, ஹாலிடே ஹோம், தனியார் பள்ளிகள் ஆகியோர்களுக் கென அழகு தோட்ட போட்டி கள் நடை பெற உள்ளது. அழகு தோட்டங்களை தற் பொழுது தயார் செய்து வைத்து கொள்வது நலம். ஏப்ரல் மாதங்களில் போட்டி களில் கலந்து கொள்ளும் தோட்டங்களை வல்லுனர் குழுவினர் ஆய்வு செய்து தேர்ந்தெடுப் பார்கள்.

<u>மலர் நாற்றுக்கள் நடவு பணி</u>

போட்டிகளை எதிர்நோக்கி யும், அழகு தோட்டங்களை அழகுபடுத்துவதனை முன் னிட்டும் மலர் நாற்றுக்கள் நடவு செய்வதற்கு இதுவே தகுந்த தருணம் ஆகும். ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் கோடை விழாவினை முன் னிட்டும், மலர் கண்காட்சி யினை முன்னிட்டும் மலர் நாற்றுக்கள் நடவு பணி முடியும் தருவாயில் உள்ளது.

எனவே, மாவட்டத்தில் உள்ள வீட்டு தோட்டங்களில் நடவு செய்வ தற்கு நாற்றுக்கள் வினியோகத்திற்கு தயார் நிலை யில் உள்ளன. சால்வியா, பென்சிடிமன், ஆப்ரிகன் மேரி கோல்டு, பிரென்ஞ் மேரி கோல்டு, கேலண்டுலா, அன்டி ரைனம், பெட்டூனியா, பேன்சி ஆஸ்டர், கார்னேசன், டையான்தஸ், கலிபோர்னியா பாப்பி, ஸ்வீட் லில்லியம், கோச்சியா, சன் பிளவர், டாலியா, லேடிஸ் லேஸ், சப்னேரியா, கோடி ஷியா, அஜிரேட்டம், ஹெலி ஹீரை சம், ஜீனியா சிலோசியா, அமா ரன்தஸ், கஷேனியா, லூபின், நெமிஷியா, ஸ்டாக்ஸ் நாற்றுக் கள் நடவிற்கு தயார் நிலையில் உள்ளன.

மிக குறைந்த விலையில் நாற்றுக்கள் வினியோகம் செய் யப்படுகிறது. ஒரு நாற்றின் விலை ரூ.2 ஆகும். தேவைப் படும் வீட்டு தோட்ட உரிமை யாளர்கள் தங்களுக்கு தேவை யான மலர் நாற்றுக்களை பெறமுன் பதிவு செய்து கொண்டு பெற்று கொள்ளவும். இவ்வாறு அதில் கூறப் பட்டு உள்ளது.

**விவசாயிகள் வாங்கியுள்ள கூட்டுறவு கடன்களின் வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும் உழவர் உழைப்பாளர் கட்சி கூட்டத்தில் தீர்மானம்**

பொங்கலூர்,

விவசாயிகள் வாங்கி யுள்ள கூட்டுறவு கடன் களின் வட்டி முழு வதையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பொங்கலூரில் நடைபெற்ற உழவர் உழைப்பாளர் கட்சி கூட் டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

<u>மாநாடு</u>

காய்ந்து போன பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலி யுறுத்தி பொங்கலூரில் உழவர் உழைப்பாளர் கட்சியின் பேரணி மற்றும் மாநாடு லட்சுமி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. மாநில ஆலோ சகரும், மாவட்ட தலைவரு மான கே.சி.எம்.பாலசுப்பிர மணியம் தலைமை தாங்கி னார். மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, ஒன்றிய பொருளாளர் சுப்பிரமணியம், மாவட்ட இளைஞரணி தலை வர் சோமசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொங் கலூர் ஒன்றிய செயலாளர் நடராஜன் வரவேற்று பேசி னார்.

கூட்டத்தில் கட்சியின் மாநில தலைவர் செல்லமுத்து, திரைபட நடிகரும், இயக்குன ருமான தங்கர்பச்சான் ஆகி யோர் சிறப்புரையாற்றினார் கள். மாநில தலைவர் செல்ல முத்து பேசும்போது கூறிய தாவது:

வறட்சி காரணமாக விவ சாயிகள் தாங்கள் வாங்கியுள்ள கடனை கட்ட முடியாமல் தவித்து வருகிறார்கள். வாழவே வழியில்லாத நிலை யில் வறுமையில் வாடிவரு கிறார்கள். இந்த நிலையில் வங்கிகளில் இருந்து ஜப்தி நடவடிக்கை எடுக்க அதி காரிகள் வருவதாக பலர் தெரிவித்தனர். அவ்வாறு வந்தால் அந்த அதிகாரிகளை சிறைபிடித்து வைத்துக் கொண்டு எங்களுக்கு தகவல் கொடுங்கள். எங்கள் மீது வழக்கு போட்டாலும் பரவா யில்லை. தமிழகம் முழுவதும் வறட்சி காணப்படுகிறது. குறிப்பாக கொங்கு மண் டலத்தை வறட்சி பாதித்த பகுதியாக அறிவித்து வறட்சி நிவாரண பணிகளை உடனே தொடங்க வேண்டும்.

இவ்வாறு செல்லமுத்து பேசினார்.

<u>தங்கர்பச்சான்</u>

மாநாட்டில் திரைப்பட இயக்குனர் தங்கர்பச்சான் பேசும்போது கூறியதாவது:

திருப்பூர் ஏற்றுமதியை நினைத்து பெருமைபட்டுக் கொண்டீர்களே. இன்று நிலை என்ன?. சாயக்கழிவு நீரால் மண்வளம், நீர் வளம் முற்றிலும் கெட்டுவிட்டது. கழிவுகளை எல்லாம் தன்னுள் வாங் கிக்கொண்டு பூமி எத்தனை சுவையான பழங்கள், காய் கறிகளை தருகிறது. இதை நாம் பாழ்படுத்தலாமா?. இந்தியா வின் முதுகெலும்பு விவசாயம் என்றார்கள். ஆனால் இன்று விவசாயம் முற்றிலும் பாதிக் கப்பட்டுவிட்டது. அப்படி யானால் முதுகெலும்பு இல்லாத இந்தியா எப்படி எழுந்து நிற்க முடியும். விவசாய சம்பந்த மான படம் எடுத்தால் நடிக்க வர பயப்படுகிறார்கள். விவ சாயிகளின் கஷ்டத்தை சொல்ல நான் நஷ்டப்பட்டா லும் பரவாயில்லை என்று தான் படம் எடுக்கிறேன். இங்கு வந்துள்ளதன் நோக்கமே உங்களை எல்லாம் ஒன்று படுத்தத்தான். அதற்கு உங்கள் ஆதரவு தேவை. இவ்வாறு தங்கர்பச்சான் பேசினார்.

<u>தீர்மானம்</u>

கூட்டத்தில் நிறைவேற் றப்பட்ட தீர்மானங்கள் வரு மாறு:

மழை பெய்து காலம் செழிக்கின்ற வரை விவ சாயிகள் உயிருடன் தாக்குப் பிடிக்க மாதம் ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும். அனைத்து கூட்டுறவு மற்றும் வங்கி கடன்களின் வட்டி முழுவதை யும் தள்ளுபடிசெய்து, அசலை செலுத்த காலநீட்டிப்பு வழங்க வேண்டும். கால்நடை தீவ னங்களை பிற மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்கவேண்டும். அரசு சார்பு நிறுவனங்கள் கொப்பரைக்கு பதில் மட்டை நீக்கிய தேங்காயாக கொள் முதல் செய்ய வேண்டும். மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.10 ஆயிரமும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரமும் வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர் மானங்கள் நிறைவேற்றப்பட் டன.

கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் திருநாவுக்கரசு, பொருளாளர் பாலசுப்பிர மணியம், கொள்கை பரப்பு செயலாளர் ஈட்டிமுனை குப்புசாமி, திருப்பூர் மாநகர செயலாளர் ஜீவா கிட்டு, ஒன் றிய பிரசார குழு தலைவர் மகாலிங்கம், ஒன்றிய இளை ஞரணி ஜெகநாதன், மாவட்ட பொருளாளர் வெங்கடாசலம் உள்பட பலர் கலந்து கொண் டனர். முடிவில் ஒன்றிய மாண வரணி தலைவர் விஜயகுமார் நன்றி கூறினார்.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.2 ஆயிரம் நிவாரணம் உழைக்கும் மக்கள் கட்சி கோரிக்கை**

பட்டுக்கோட்டை,

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.2 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு உழைக்கும் மக்கள் கட்சி கோரிக்கை அனுப்பியுள்ளது.

பட்டுக்கோட்டை ராமச்சந்திரா மண்டபத்தில் உழைக்கும் மக்கள் கட்சி செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பொதுச் செயலாளர் வீரமாரிமுத்து தலைமை தாங்கினார். ஆர். பெரமையன் வரவேற்றார். பொன்சிவலிங்கம், வேலுசாமி, நாகூரான், ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

இலங்கையில் தமிழ் மக்களை கொன்று குவித்த ராஜபக்சே வருகையை வன்மையாக கண்டித்தும், தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வழங்க வேண்டும் என்றும், வேலையில்லாமல் பாதிக்கப்பட்ட விவசாய தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.2 ஆயிரம் வழங்க வேண்டும் என்றும், தாட்கோ தொழிற் கடனை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தடையின்றி வழங்க வேண்டும் என தமிழக அரசை கேட்டுக்கொள்வது. போன்ற தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. முடிவில் கே. முருகேசன் நன்றிக்கூறினார்.

**திருவெண்ணைநல்லூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு ஒரே நாளில் 1100 நெல்மூட்டை விற்பனைக்கு வந்தது அதிகபட்சமாக ரூ.1320–க்கு விற்பனையானது**

அரசூர்,

திருவெண்ணைநல்லூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு ஒரே நாளில் 1100 மூட்டை நெல் விற்பனைக்கு வந்தது. இதில் அதிகபட்சமாக ரூ.1320–க்கு ஒரு மூட்டை நெல் விற்பனை யானது.

விளை பொருட்கள்

விழுப்புரம் அருகே உள்ள திருவெண்ணைநல்லூர் ரூராட்சி கட்டிடத்தில் ஒழுங்கு முறை விற்பனை கூடம் ஒரு வாடகை கட்டி டத்தில் இயங்கி வருகிறது. இந்த ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு மணப்பாக்கம், பெரிய செவலை, சின்னசெவலை, சரவணப்பாக்கம், கொரட்டூர், தடுத்தாட்கொண்டூர், ஏமப்பூர், எடையார், ஏனாதி மங்கலம், கிராமம், உள்பட சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களில் விளையும், விளை பொருட்களை விவசாயிகள் மாட்டுவண்டி, டிராக்டர் களில் கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

1100 நெல் மூட்டைகள்

இந்த நிலையில் நேற்று ஒரே நாளில் திருவெண்ணை நல்லூர் ஒழுங்குமுறை விற் பனை கூடத் துக்கு 1100 நெல் மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. இந்த விற்பனை

கூடத்துக்கு சின்னசேலம், கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, பண்ருட்டி, விழுப்புரம் ஆகிய ஊர்களில் இருந்து நெல் மூட்டைகளை வாங்க வியாபாரிகள் வந்திருந்தனர்.

அதிகபட்சமாக ரூ.1320–க்கு விற்பனை

விற்பனை கூடத்துக்கு வந்த நெல் மூட்டை களான வெள்ளை பொன்னி ஒரு மூட்டை (75கிலோ) அதிக பட்சமாக ரூ.1320க்கு விலை நிர்ண யிக்கப்பட்டது. அதே போல் மற்ற ரகங்களான குச்சிசன்னரகம் ஒரு மூட்டை நெல் ரூ.1250க்கும், பொன் மலைஆயிரம் ஒரு மூட்டை ரூ.1050க்கும், ஏ.டி.சி.39 ரக நெல் மூட்டை ரூ.1150க்கும் விற்பனை யானது. விற்பனை செய்யப்பட்ட நெல் மூட்டைகளுக்கு வியாபாரிகள் , விவசாயிகளுக்கு பணப்பட்டு வாடா செய்தனர்.

<u>வசதியானஇடம் தேவை</u>

இந்த விற்பனை கூடம் குறித்து விழுப்புரம் ஒழுங்குவிற்பனை கூட செயலாளர் ஞானவேல் கூறியதாவது:–

இந்த விற்பனை கூடம் வாடகை கட்டிடத்தில் இயங்குகிறது. இந்த கட்டிடத்தில் விற் பனைக்கு வரும், விற்பனை செய்யப்பட்ட தனிய மூட்டைகளை பாதுகாப்பாக வைக்க போதிய வசதி இல்லை. ஆகையால் போதிய இடவசதியுடன் இருக்கும் இடத்தை தனியார் யாராவது வாடகைக்கு கொடுத்தால் மிக வசதியாக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார். அப்போது கண்காணிப்பாளர் வெங் கடேசன், ஊழியர் தண்ட பாணி ஆகியோர் உடனிருந்தன.

**தேனி மாவட்டத்தில் விவசாய நிலங்களில் பார்த்தீனியம் விஷச் செடிகளை ஒழிப்பதில் சிக்கல் நிதி ஒதுக்கீடு இல்லாததால் பணிகள் முடக்கம்**

தேனி,

தேனி மாவட்டத்தில் விவசாய நிலங்களில் பார்த்தீனியம் விஷச் செடிகளை ஒழிக்க தனி யாக நிதி ஒதுக்கீடு இல்லாததால் பார்த் தீனியம் செடிகளை ஒழிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு உள்ளது.

<u>பாழாக்கும் பார்த்தீனியம்</u>

பார்த்தீனியம் எனும் விஷச் செடிகள் விவசாய பயிர்களுக்கு செல்லும் தண்ணீரை எடுத்துக் கொள்வதுடன், நிலத்தடி நீர் மட்டம் பெருகுவதையும் தடுக் கிறது. எனவே இந்த விஷச் செடிகளை ஒழிக்க அரசு பல் வேறு கட்டங்களாக நடவடிக் கைகள் எடுத்து வருகிறது. பள்ளி, கல்லூரி

வளாகங்களில் நிற்கும் பார்த் தீனியம் விஷச் செடிகளை கல்வித்துறை மூல மாகவும், விவசாய நிலங்களில் இருக்கும் பார்த்தீனியம் செடி களை வேளாண்மை துறை மூலமாகவும், குடியிருப்புகள் மற்றும் சாலையோரங்களில் இருக்கும் செடிகளை ஊராட்சி நிர்வாகம் மூலமாகவும் அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு உள்ளன.

அதன்படி தேனி மாவட் டத்தில் பல்வேறு கட்டங் களாக ஊராட்சி நிர்வாகம், கல்வித்துறை மற்றும் வேளாண் மைத்துறை சார்பில் பார்த்தீனி யம் விஷச் செடிகளை ஒழிக்கும் பணிகள் நடத்தப்பட்டன. இந்த பார்த் தீனியம் செடி களால் விவசாய பயிர்கள் பெரும் அளவில் பாதிப்பை சந்தித்து வருவதால், வேளாண் மைத்துறை சார்பில் கடந்த ஆண்டு சிறப்பு முகாம்கள் அமைத்து இந்த விஷச் செடிகளை ஒழிக்க நட வடிக்கை மேற் கொள்ளப் பட்டன.

<u>பணிகள் முடக்கம்</u>

தற்போது பார்த்தீனியம் விஷச் செடிகளை ஒழிக்கும் பணிகள் முடங்கி உள்ளன. இதனால் தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் விவ சாய தோட்டங்களில் பார்த் தீனியம் செடிகள் பரவிக்கிடக் கின்றன. இதன் காரணமாக பல நூறு ஏக்கர் பரப்பளவில் விவசாய பணிகள் பாதிப்பை சந்தித்து உள்ளன. பார்த் தீனியம் விஷச் செடிகளை ஒழிக்க வேளாண்மைத் துறைக்கு தனியாக நிதி ஒதுக்கீடு இல்லாததால் இந்த பணிகள் முடங்கி இருப்பதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து வேளாண்மைத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

பார்த்தீனியம் விஷச் செடி களை ஒழிக்க வேளாண்மைத் துறை பல்வேறு நடவடிக்கை களை மேற்கொண்டது. சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்ட போதிலும், விவசாயிகள் மத்தியில் போதிய விழிப் புணர்வு இல்லை. செடிகள் சிறியதாக இருக்கும் போதே தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். பார்த்தீனியம் விஷச் செடிகளை ஒழிக்க தேனி மாவட்டத்திற்கு அரசு தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். இவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்தால் இந்த பணிகளை முழுமையாக நிறை வேற்ற ஏதுவாக இருக்கும். இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

**உழவர் பாதுகாப்பு திட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ள அடையாள அட்டை தயாரிப்புபணி தீவிரம்**

சிவகாசி,

சிவகாசி தாலுகாவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் விவசாயிகள் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் சேர்ந்தனர். இவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடையாள அட்டை தயாரிக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

அடையாள அட்டை

தமிழகம் முழுவதும் அரசு சார்பில் உழவர் பாதுகாப்பு திட்டம் தொடங்கப்பட்டு அதன் மூலம் ஏழை விவசாயி கள் பலர் பயன் பெற்று வரு கிறார். இந்த திட்டத்தின் கீழ் சிவகாசி தாலுகாவுக்கு உட் பட்ட பகுதியில் மட்டும் கடந்த நவம்பர் மாதம் வரை சுமார் 23 ஆயிரத்து 892 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினர்களாக இருக்கும் நபர்களுக்கு திருமண உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஆணுக்கு ரூ.8 ஆயிரமும், பெண்ணுக்கு ரூ.10 ஆயிரமும் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் மகப்பேறு உதவி தொகை, முதியோர் உதவி தொகை, இயற்கை மரணம் உதவி தொகை, கல்வி உதவி தொகை, திருநங்கைகள் உதவிதொகை ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் கடந்த நவம்பர் மாதம் தாலுகாவுக்கு உட்பட்ட அனைத்து கிராம நிர்வாக அலுவலகங்களிலும் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினர் சேர்க்கைப்பணி மும்முரமாக நடைபெற்றது. இதில் சிவகாசி தாலுகாவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் செய்து வருபவர்கள் ஆர்வத் துடன் மனு செய்தனர்.

25 ஆயிரம் பேருக்கு

இந்த மனுக்கள் அனைத்தும் சிவகாசி தாலுகா அலுவலகத்தில் இயங்கி வரும் சமூகபாதுகாப்பு திட்ட தனி தாசில்தாருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் உரிய விசாரணை நடத்தப்பட்டு தகுதியாவர்களை பட்டியலில் சேர்க்க பரிந்துரை செய்யப் பட்டது. அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட நபர்களின் பெயர், விபரம் மற்ற தகவல்கள் அனைத்தும் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்டு சம்மந்தப் பட்டவர்களுக்கு அடையாள அட்டை தயாரிக்கும் பணி தற்போது மும்முரமாக நடைபெற்று வருகிறது. சிவகாசி தாலுகாவில் மட்டும் 25 ஆயிரத்து 355 பேருக்கு இந்த அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது.

விரைவில் வழங்கப்படுகிறது

இந்த அடையாள அட்டை இரண்டு வண்ணங்களில் வழங்க அரசு முடிவு செய் துள்ளது. இந்த பணிகள் அனைத்தும் முடிந்த பின்னர் சம்மந்தப்பட்ட விவசாயிகளுக்கு உழவர் பாதுகாப்பு திட்ட

அடையாள அட்டை வழங்கப்படும். அந்த பணிகள் விரைவில் நடைபெறும் என்று வருவாய்த்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தினகரன்

2.44 டிஎம்சி தண்ணீர் திறந்து விட்டாலும் பயிர்களை காப்பாற்ற முடியாது

தஞ்சை : காவிரி நீர் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற விசாரணையின்போது, டெல்டா மாவட்டங்களில் சாகுபடியை காக்க காவிரியில் 2.44 டிஎம்சி தண்ணீர் திறக்க கர்நாடக அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலர் சாமி.நடராஜன் கூறுகையில், ‘உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு இறுதியாக சம்பா பயிரை காப்பாற்ற 12 டிஎம்சி வேண்டும் என கடந்த மாதம் கோரிக்கை விடுத்தது. 2.44 டிஎம்சி தண்ணீர் மேட்டூரை அடைந்து, டெல்டா மாவட்டத்திற்கு வருவதும் அரிதுதான்" என்றார்.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் கக்கரை சுகுமார் கூறுகையில், "பிப்ரவரியில் தண்ணீர் திறந்ததே கிடையாது. இதுதான் முதல் முறை. இந்த 2.44 டிஎம்சி தண்ணீரே மேட்டூர் வந்து சேராது. 12 டிஎம்சி கோரி தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது. இனிமேல் இதிலும் எந்த பயனும் இருக்காது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை தருவதை காலதாமதம் செய்வதற்காகதான். 2.44 டிஎம்சி தண்ணீரையும் கர்நாடக அரசு திறந்துவிடும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை.

சட்டப்பேரவை கூட்டத்தொடரில் நாளை (இன்று) விவசாயிகளுக்கான நிவாரண தொகை வழங்குவது குறித்து முதல்வர் ஜெயலலிதா அறிவிக்கவில்லை எனில் 12ம் தேதி ஒரத்தநாட்டில் விவசாயிகள் அனைவரும் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடுவோம்" என்றார். தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாவட்ட செயலர் சுவாமிமலை விமல்நாதன் கூறுகையில், ‘2.44 டிஎம்சி தண்ணீர் நிச்சயமாக போதுமானதல்ல.

கர்நாடகத்தில் இருந்து வரும் தண்ணீர் காக்கை குளிப்பதற்கு மட்டுமல்ல, காகம் குடிப்பதற்கு கூட போதாது. பாதிப்பு ஏற்பட்டது முடிந்துவிட்ட ஒன்று. எனவே, கர்நாடகாவிடம் இருந்தும், மத்திய அரசிடம் இருந்தும் இழப்பீடு பெற்று பாதிக்கப்பட்ட டெல்டா விவசாயிகளுக்கு வழங்க

வேண்டும்" என்றார்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் உள்ளது

தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை தலைவர் கலைவாணன் கூறுகையில், 'மத்திய குழுவினரே ஒரே நாளில், பாதிப்புகளை முழுமையாக பார்வையிட இயலவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு முழுமையாக பார்வையிடாமல் அறிக்கையில் 2.44 டிஎம்சி நீர் போதுமானது என்று அறிக்கை அளித்துள்ளது, விவசாயிகளுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் மன வேதனை அளித்துள்ளது" என்றார்.

வீராணம் ஏரியில் தண்ணீர் இல்லாததால்

வெற்றிலை பயிர்கள் கருகும் அபாயம்

காட்டுமன்னார்கோவில் : கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவிலில் வீராணம் ஏரி உள்ளது. இந்த ஏரிக்கு வடவாறு மூலம் தண்ணீர் வரும். மழை காலங்களில் செங் கால் ஓடை, கருவாட்டு ஓடை வழியாக தண்ணீர் வரும். ஏரியில் தேக்கப்படும் தண்ணீர் மூலம் சுமார் 45 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் பாசனம் பெறுகின்றன. மேலும் சென்னைக்கும் குடிநீர் அனுப்பப்படுகிறது.

இந்த ஆண்டு மேட்டூர் அணையிலிருந்து சரிவர தண்ணீர் திறக்கப்படாததால் வீராணம் ஏரி ஒரு முறை கூட முழு கொள்ளளவு ஆன 47.50 அடி நிரம்பவில்லை. இதன் காரணமாக இந்த பகுதியில் பயிரிடப்பட்ட விவசாய நிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஏரியை நம்பி நெற்பயிர் மட்டுமல்லாது வெற்றிலை சாகுபடியும் செய்யப்பட்டு வந்தது. இந்த ஆண்டு தண்ணீர் இல்லாததால் சாகுபடி செய்யப்பட்ட வெற்றிலை கொடிகால்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வெற்றிலை சாகுபடி என்பது பல்லாண்டு பயிர். வீராணம் ஏரி கரை ஓரத் தில் உள்ள லால்பேட்டை, கொல்லமலை கீழ்பாதி, மேல்பாதி, திருச்சின்னபுரம், மானியம் ஆடூர், கந்தகுமாரன், நெடுஞ்சேரி புத்தூர், கொள்ளுமேடு, நத்தமலை ஆகிய கிராமங்களில் சுமார் 140 ஏக்கர் விளை நிலங்களில் பயிரிடப்பட்டுள்ளது. ஏரி தண்ணீரை மட்டுமே நம்பி இந்த பயிர் செய்யப்படுகிறது. இந்த பகுதியில் சுமார் 10 லிருந்து 15 ஆழ்குழாய் கிணறுகள் மட்டுமே உள்ளது. ஏரியில் தொடர்ந்து தண்ணீர் இல்லாமல் வறண்டு வருவதால் பல லட்சம் செலவு செய்து

வெற்றிலை சாகுபடி செய்த விவசாயிகள் அதிர்ச்சி அடைந்து வருகின்றனர்.

50 ஆண்டுகளில் பெரும் நஷ்டம் ஏற்படுவது இதுவே முதல் முறை: இதுபற்றி கந்தகுமாரனை சேர்ந்த வெற்றிலை சாகுபடி செய்த விவசாயி செல்லப்பன் கூறியதாவது:
வீராணம் ஏரியின் தண்ணீரை நம்பி சாகுபடி செய்தோம், தற்போது ஏரி வறண்டு வருகிறது. சென்னைக்கு குடிநீர் அனுப்புவதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரசு எங்களை போன்ற விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே இல்லை. கடந்த 50 ஆண்டுகளில் பெருத்த நஷ்டம் ஏற்படுவது இதுவே  முதல் முறை என்று தெரிவித்தார்.

மத்திய அமைச்சர் தகவல்

கொப்பரை கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.150 உயர்வு
புதுடெல்லி : மத்திய விவசாய பொருட்கள் விலை நிர்ணய கமிஷன், இந்த ஆண்டு கொப்பரைக்கான குறைந்தபட்ச ஆதார விலையை உயர்த்த வேண்டாம் என்று பரிந்துரை செய்தது. கொப்பரை தேங்காய் தேக்கம் அதிகரித்துள்ளதால், விலையை உயர்த்தக் கூடாது என அந்த கமிஷன் கூறியிருந்தது. ஆனால், விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு உயர்தர கொப்பரைக்கு குவிண்டாலுக்கு ரூ.250ம், சாதாரண கொப்பரைக்கு குவிண்டாலுக்கு ரூ.200ம் உயர்த்த வேண்டும் என்று மத்திய விவசாய அமைச்சகம் கோரிக்கை விடுத்தது.

இந்நிலையில், பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு நேற்று கூடி, கொப்பரை விலை குறித்து ஆலோசித்தது. கூட்டத்து க்கு பின்னர், உணவு துறை அமைச்சர் கே.வி.தாமஸ் கூறியதாவது: கடந்த ஆண்டில், உயர்ரக கொப்பரைக்கான ஆதார விலை குவிண்டாலுக்கு ரூ.5,350 என்றும், சாதா கொப்பரை குவிண்டாலுக்கு ரூ.5,100 என்றும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு இரு ரகங்களுக்கும் தலா ரூ.150 வீதம் விலை உயர்த்தப்படுகிறது.

இதன்படி, உயர்ரகம் குவிண்டாலுக்கு ரூ.5,500, சாதா ரகம் குவிண்டாலுக்கு ரூ.5,250 என்று விலை நிர்ணயிக்கப்படுகிறது. இதற்கு அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது.
இவ்வாறு அமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்தார். நடப்பு பருவத்தில் தற்போது 19 லட்சம் ஹெக்டேரில் சுமார் 1474.50 கோடி கொப்பரைகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகம் மாநிலங்களில் அதிக அளவில் உற்பத்தி

செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரி, கோவா, அசாம், மகாராஷ்டிரா, ஒடிசா, மேற்கு வங்காளம் மற்றும் அந்தமான் நிகோபரிலும் கொப்பரை உற்பத்தியாகி உள்ளது.

காவிரி டெல்டாவில் கருகும் பயிர்களை காப்பாற்ற

2.44 டிஎம்சி நீர் திறந்துவிட வேண்டும்

புதுடெல்லி : காவிரி டெல்டாவில் கருகும் பயிர்களை காப்பாற்ற, காவிரியில் தமிழகத்துக்கு 2.44 டிஎம்சி தண்ணீரை உடனடியாக திறந்து விடும்படி கர்நாடகாவுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 9 டிஎம்சி தண்ணீர் திறந்து விடும்படி தமிழகம் விடுத்த கோரிக்கையை நீதிபதிகள் நிராகரித்தனர். தமிழகத்தில் இந்தாண்டு பருவமழை பொய்த்ததால், காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி பாதித்தது. தற்போது, சம்பா பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

அவற்றுக்கு போதுமான தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். இதையடுத்து, தமிழகத்துக்கு தர வேண்டிய தண்ணீரை திறந்து விட உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. இதை விசாரித்த உச்ச நீதிமன்றம், தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடும்படி கர்நாடக அரசுக்கு பலமுறை உத்தரவிட்டது. ஆனால், அதை கர்நாடக அரசு அமல்படுத்தவில்லை. இதையடுத்து, நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் தமிழக அரசு தொடர்ந்தது.

இந்நிலையில், காவிரி நதிநீர் வழக்கு கடந்த 4ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, தமிழகத்துக்கு 2 டிஎம்சி தண்ணீரை உடனடியாக திறந்து விடும்படி கர்நாடக அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும், பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டங்களில் ஆய்வு நடத்தி அறிக்கை தாக்கல் செய்யும்படியும், அதற்காக நிபுணர் குழுவை அமைக்கும்படியும் மத்திய நீர்வள துறைக்கு உத்தரவிட்டனர்.

இதையடுத்து, மத்திய வேளாண் துறை துணை கமிஷனர் பி.கே.ஷா, தலைமை பொறியாளர்கள் மகேந்திரன், ஜேக்கப், செயற்பொறியாளர் தங்கமணி ஆகியோரை கொண்ட நிபுணர் குழு அமைக்கப்பட்டது. நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில் இந்த குழு நேற்று முன்தினம் ஆய்வு செய்தது. சம்பா பயிர்களின் நிலை, அவற்றுக்கு தற்போது தேவைப்படும்

தண்ணீரின் அளவு ஆகியவை குறித்து விவசாயிகள் மற்றும் தமிழக அரசு அதிகாரிகளிடம் கருத்துகளை கேட்டறிந்தது.

தமிழக வேளாண்மை துறை, வருவாய்துறை உயர் அதிகாரிகளுடனும் மத்திய குழுவினர் கருத்துக்களை கேட்ட பின்னர். தனது ஆய்வு அறிக்கையை கடந்த 6ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அதில், 'டெல்டா பகுதிகளில் 50 சதவீத நிலங்களில் சம்பா அறுவடை முடிந்து விட்டது. 40 சதவீத நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள், அறுவடைக்கு தயாராக உள்ளன. மீதமுள்ள 10 சதவீத நிலங்களுக்கு மட்டுமே தண்ணீர் தேவைப்படுகிறது' என்று அறிக்கையில் நிபுணர் குழு கூறியுள்ளது.

இந்நிலையில், உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு நீதிபதிகள் லோதா, செல்லமேஸ்வர், மதன் லோகூர் அடங்கிய பெஞ்ச் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக அரசு சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் வைத்திய நாதன், ''காவிரி டெல்டா மாவட்டங்களில் மத்திய குழு முழுமையாக ஆய்வு செய்யவில்லை. சம்பா பயிர்கள் சாகுபடியில் உள்ள 10 சதவீத இடங்களில் மட்டுமே ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். அதிக இடங்களில் சம்பா பயிரிடப்பட்டுள்ளது.

அவற்றுக்கு கூடுதலாக தண்ணீர் தேவைப்படுகிறது. அவற்றை நிபுணர்கள் குழு கணக்கில் எடுக்கவில்லை. எனவே, சரியான புள்ளி விபரங்கள் இல்லாத நிபுணர்களின் குழு அறிக்கையை ஏற்க கூடாது. சம்பா பயிர்களை காப்பாற்ற 9 டிஎம்சி தண்ணீரை திறந்து விடும்படி கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும்'' என்று வாதிட்டார்.

இதை கேட்ட நீதிபதிகள், ''நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்று ஒரே நாளில் நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டு டெல்டா பகுதிகளில் ஆய்வு செய்து அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. துல்லியமான, சரியான புள்ளி விபரங்களுடன் இந்த அறிக்கையை தந்துள்ளார்கள். அவர்களை பாராட்டுவதுதான் சரியானது. தமிழக அரசின் கோரிக்கையை அப்படியே வேதவாக்காக எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று கோருவதை ஏற்க முடியாது.

எனவே, குழுவின் அறிக்கை அடிப்படையில் சம்பா பயிர்களை காப்பாற்ற தமிழகத்துக்கு கர்நாடக

அரசு 2.44 டிஎம்சி தண்ணீரை உடனடியாக திறந்து விட வேண்டும். காவிரி நதிநீர் தொடர்பாக கர்நாடக அரசும், தமிழக அரசும் நீதிமன்றத்துக்கு தொடர்ந்து தவறான தகவல்களை தந்து கொண்டிருக்கின்றன. இதுபோல் செய்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும்'' என்று உத்தரவிட்டனர்.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்கு தமிழக விவசாயிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். 'சம்பா பயிர்களை காப்பாற்ற 2.44 டிஎம்சி தண்ணீர் போதாது. மேட்டூரில் இருந்து இந்த தண்ணீர் திறந்து விடப்பட்டால் கடைமடை பகுதிகளுக்கு வராது'' என்றனர்.

தண்ணீர் திறக்க மறுப்பு

பெங்களூர்; உச்ச நீதிமன்ற தீர்ப்பு குறித்து கர்நாடக சட்டப்பேரவையில் இம்மாநில பாசனத் துறை அமைச்சர் பசவராஜ் பொம்மை பேசுகையில், ''தமிழகத்துக்கு 2.44 டி.எம்.சி தண்ணீர் திறந்து விடும்படி உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவை செயல்படுத்த முடியாத நிலையில் கர்நாடக அரசு உள்ளது. 1991ல் காவிரி நடுவர் மன்றம் இடைக்கால தீர்ப்பை வழங்கியது. இந்த தீர்ப்புதான் மற்றதற்கு எல்லாம் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

தற்போது, கே.ஆர்.எஸ். அணையில் 6.97 டி.எம்.சி., ஹேமாவதியில் 5.4 டி.எம்.சி, கபினியில் 1.12 டி.எம்.சி தண்ணீர் இருப்பு உள்ளது. ஆனால், மேட்டூரில் 8.3 டி.எம்.சியும், பவானியில் 3 டி.எம்.சி தண்ணீரும் உள்ளது. தமிழகத்துக்கு தேவையான தண்ணீர் அவர்களிடமே உள்ளது. எனவே, இந்த விஷயத்தில் கடினமான முடிவை எடுக்க கர்நாடக அரசு தயாராக உள்ளது'' என்றார்.

முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் பேசுகையில், ''உச்ச நீதிமன்றத்தில் நமது வக்கீல்களின் வாதம் சிறப்பாகவே இருந்தது. நீர் இருப்பு குறித்தும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டு உள்ளது. தண்ணீர் திறக்கும்படி மட்டுமே உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எப்போது என்று அவகாசம் கொடுக்கவில்லை. எனவே, இந்த விஷயத்தில் கர்நாடகாவின் நலன் காக்கப்படும். நானும், அமைச்சர் பசவராஜ் பொம்மையும் உடனடியாக டெல்லி சென்று நிலவரம் குறித்து பரிசீலனை செய்ய உள்ளோம்'' என்றார்.

தஞ்சை, நாகை, திருவாரூரில் நாளை ரயில், சாலை மறியல்

ஒரத்தநாடு : தஞ்சை, நாகை, திருவாரூரில் நாளை ரயில், சாலை மறியல் போராட்டம் நடைபெறும் என விவசாயிகள் அறிவித்துள்ளனர். தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு அடுத்த ஆம்பலாப்பட்டு கிராமத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில குழு கூட்டம் நடைபெற்றது. ஈரோடு மாவட்ட செயலாளர் துளசிமணி தலைமை தாங்கினார். மாநில விவசாய சங்க பொதுச்செயலாளர் துரைமாணிக்கம் முன்னிலை வகித்தார்.

தமிழகத்தில் பருவமழை குறைவால் மாநிலம் முழுவதும் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் விவசாய உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. காவிரியில் கர்நாடக அரசு தண்ணீர் விடாததால் டெல்டா மாவட்டங்களிலும் நெல் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று முதல்வர் அறிவித்தார். நிவாரணம் பற்றிய அறிவிப்புகள் கவர்னர் உரையில் இடம்பெறாதது வருத்தத்தை அளிக்கிறது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் வரும் 9ம் தேதி (நாளை) சாலை, ரயில் மறியல் போராட்டம் நடத்துவது எனவும், அடுத்த கட்டமாக அனைத்து மாவட்டங்களிலும் வரும் 19ம் தேதி தாலுகா தலைநகரங்களில் சட்டை அணியாமல் ஆர்ப்பாட்டம் நடத்தவும் முடிவு செய்துள்ளோம்.

தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்க வேண்டும். பயிர்கள் கருகிப்போன விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம், தரிசாகக் கிடக்கும் நிலங்களுக்கு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம், விவசாய தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். மத்திய அரசு காவிரி நடுவர்மன்ற தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டும். மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு பேரிடர் கால நிவாரணம் வழங்க வேண்டும் உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வறட்சி, தீவன பற்றாக்குறை எதிரொலி

**ஈரோடு மாட்டுச் சந்தைக்கு அதிகளவில் மாடுகள் வருகை**

ஈரோடு : வறட்சி மற்றும் தீவன பற்றாக்குறையால் ஈரோடு மாட்டுச் சந்தைக்கு விற்பனைக்காக அதிகளவில் மாடுகள் வந்தன. ஈரோடு கருங்கல்பாளையத்தில் வாரம்தோறும் வியாழக்கிழமை மாட்டுச்சந்தை நடப்பது வழக்கம். இந்த சந்தையில் மாடுகளை விற்பனை செய்வதற்காக ஈரோடு, நாமக்கல், கரூர், கோவை ஆகிய மாவட்டங்களில் இருந்து மாடுகளை விற்பனைக்காக விவசாயிகள் கொண்டு வருவார்கள்.

இந்த மாடுகளை வாங்கி செல்வதற்காக தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களை சேர்ந்த வியாபாரிகள் அதிக அளவில் வருவார்கள். குறிப்பாக, ஆந்திராவை சேர்ந்த வியாபாரிகள் அதிக அளவில் மாடுகளை வாங்கி செல்வது வழக்கம். நேற்று காலை துவங்கிய மாட்டுச்சந்தையில் பசு ரகங்களான ஜெர்சி, சிந்து, நாட்டுகிராஸ், சீமைபசு, பிளாக் அண்ட் ஒயிட் ரக மாடுகள் 450 மாடுகளும், எருமையில் முரா, நாட்டு கிராஸ் மாடு ரகங்கள் 350 மாடுகளும் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது.

இதில் எருமைமாடு 18 ஆயிரம் ரூபாய் முதல் 35 ஆயிரம் ரூபாய் வரையும், பசு மாடு 16 ஆயிரம் ரூபாய் முதல் 32 ஆயிரம் ரூபாய் வரையும் விலை போனது. மாட்டுச்சந்தை வியாபாரிகள் கூறுகையில், 'கடும் வறட்சியால் தீவன பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. இதனால், பெரும்பாலான விவசாயிகள் மாடுகளை விற்பதற்காக இந்த சந்தைக்கு கொண்டு வந்துள்ளனர். குறிப்பாக சேலம், நாமக்கல், கோவை, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிகமாக விவசாயிகள் வந்துள்ளனர். மாடுகளின் விலையும் ஓரளவிற்கு குறைவாக உள்ளதால் மாடுகள் விற்பனையும் அதிகரித்துள்ளது' என்றனர்.

**மேட்டூர் அணையில் அடுத்த ஆண்டு பெரும் வெள்ளம் ஏற்பட வாய்ப்பு**

மேட்டூர், : மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 30.44 அடியாக இருந்தது. நீர்வரத்து வெகுவாக குறைந்துள்ள நிலையில் பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக உள்ளதால் இருப்பு 7.70 டி.எம்.சி.யாக குறைந்தது.

மேட்டூர் அணையின் வரலாற்றில் 1946ம் ஆண்டு தான் மிக குறைந்த அளவாக நீர்மட்டம் 6.4 அடியாக இருந்துள்ளது. 1963ம் ஆண்டு 8.5 அடியாகவும், 1964ம் ஆண்டு 9.9 அடியாகவும் இருந்துள்ளது. 6.5.2004ல் நீர்மட்டம் 24.34 அடியாக இருந்துள்ளது. 10 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று அணையின் நீர்மட்டம் 30 அடியாக குறைந்துள்ளது. ஒவ்வொரு முறையும் நீர்மட்டம் குறைந்தபட்ச அளவை எட்டும்போது அடுத்த ஆண்டுகளில் அணை எதிர்பாராத அளவில் நிரம்பி உபரி நீர் வெளியேறி வந்துள்ளது. 2004ம் ஆண்டு அணையின் நீர்மட்டம் குறைந்தபட்சமாக 24.34 அடியை எட்டிய நிலையில், 2005ம் ஆண்டு பெரும் வெள்ளம் ஏற்பட்டது. எனவே, அடுத்த ஆண்டு பெரும் வெள்ளம் ஏற்பட வாய்ப்புள்ளது என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் விவசாயிகள் கடை வைக்க குலுக்கல்**

கோவை, : ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் விவசாயிகள் கடை வைக்க தினமும் குலுக்கல் நடத்தப்படுகிறது.

கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் 130 கடைகள் உள்ளது. இங்கே விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். தினமும் 70 முதல் 80 டன் காய்கறிகள் இங்கே விற்பனையாகிறது. 20 முதல் 30 கடைகள் விவசாயிகள் வராமல் தினமும் காலியாக கிடக்கிறது விவசாயிகள் சிலர் முன் பகுதியில் உள்ள கடைகளையே அதிகம் விரும்புவதாக கூறப்படுகிறது. இங்கே இடம் பிடிக்க தினமும் கடும் போட்டி நிலவியது. இந்நிலையில் உழவர் சந்தை நிர்வாகத்தினர் சில மாதங்களுக்கு முன் குலுக்கல் நடைமுறையை கொண்டு வந்தனர். தினமும் 130 கடைகளுக்கும் விவசாயிகளின் பெயர் எழுதி குலுக்கல் போட்டு கடைகளை ஒதுக்கீடு செய்து வந்தனர். இந்த குலுக்கலுக்கு சில விவசாயிகள் ஆட்சேபம் தெரிவித்து வருகின்றனர். சுழற்சி முறையில் வியாபாரிகளுக்கு 1 முதல் 130 கடைகளை ஒதுக்கீடு செய்யுங்கள் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். விவசாயிகள் சிலர் எடை கற்களை விதிமுறை பயன்படுத்துவதாக கூறப்பட்டது. இதை தொடர்ந்து விவசாயிகளிடம் எடை மெஷின்களை தினமும் வாங்கி அளவுகளை சரிபார்த்த விற்பனை செய்ய ஒப்படைத்து வருகிறோம் என உழவர் சந்தை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

**கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் கொப்பரை ஏலம் ரத்து**

கோபி,: விலை குறைந்ததால் கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் இந்த வாரம் கொப்பரை ஏலத்தை விவசாயிகள் ரத்து செய்தனர்.

கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் வாரம்தோறும் கொப்பரை ஏலம் நடைபெறுவது வழக்கம். இங்கு நடைபெறும் கொப்ப ரை ஏலத்தில் கோபி, நம்பியூர், காராப்பாடி, கடத்தூர் உள்ளிட்ட பகுதிகிளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொள்வது வழக்கம். இங்கு கடந்த சில மாதங்களாக கொப்பரைக்கு நல்ல விலை கிடைத்து வந்ததைத் தொடர்ந்து கொப்பரை வரத்து அதிகரித்து வந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினமும் இதே போன்று சுமார் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் 430 மூட்டை கொப்பரையை விற்பனைக்காக கொண்டுவந்திருந்தனர். ஆனால் கொப்பரையின் விலை கிலோ ஒன்று அதிகபட்சமாக ரூ.43.90க்கு மட்டுமே ஏலம் போனது. இதனால் அதிர்ச்சியடைந்த விவசாயிகள் ஏலத்தை ரத்து செய்தனர் . இதுகுறித்து விவசாயிகள் கூறும் போது, கடந்த வாரம் கொப்பரையின் விலை அதிகபட்சமாக கிலோ ஒன்று ரூ.47.49க்கும், குறைந்த பட்சமாக ரூ.43.31க்கும் விலை போனது. கடந்த சில நாட்களாக அதிகரித்து வரும் வெயில், கூலி ஆட்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களால் கொப்பரைக்கு உரிய விலை கிடைக்காத நிலையில் இருந்தது. இந்நிலையில் கடந்த சில வாரங்களாக அதிகபட்ச விலை கிடைத்து வந்தது. இந்நிலையில் இந்த வாரம் கொப்பரையின் விலை கிலோ ஒன்றுக்கு கடந்த வாரத்தை விட 4 ரூபாய் குறைந்துள்ளது. அதனால் இந்த வாரம் ஏலத்தை நிறுத்தி வைத்துள்ளோம் என்றனர்.

**வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் முறைகேடு பூட்டு போட்டு**

**போராட்டம் நடத்த விவசாயிகள் முடிவு**

கோபி,: கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் விவசாயிகளை திரட்டி கூட்டுறவு சங்கத்திற்கு பூட்டு போட்டு போராட்டம் நடத்தப் போவதாக விவசாய சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

கோபி மொடச்சூர் சாலையில் கோபி வேளா ண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்தில் வாரம் தோறும் இரு முறை வாழைத்தார் ஏலம் நடைபெறுவது வழக்கம். இங்கு நடைபெறும் ஏலத்தில் கலந்து கொள்ளும் வியாபாரிகள் ஏலம் நடைபெறுவதற்கு முன்பே முன்வைப்பு தொகை செலுத்த வேண்டும். அதன் பின்னர் நடைபெறும் ஏலத்தில் தாங்கள் செலு த்திய பணத்திற்கேற்ப மட்டுமே ஏலம் கேட்க முடியும். ஏலத்தில் கூடுதல் விலைக்கு வாழைத்தார்களை வாங்கினால் அதற்குரிய பணத்தையும் சங்க அலுவலகத்தில் செலுத்திய பிறகே வாழைத்தார்களை பெற்றுச் செல்ல முடியும். விவசாயிகளுக்கு ஏலம் முடிந்த உடனே பணம் கொடுக்க வேண்டும் என்பதால் வியாபாரிகள் ஏலம் முடிந்த உடனே முழுத்தொகையையும் செலுத்த வேண்டும் என சங்கத்தில் விதிமுறைகள் உள்ளது. இந்நிலையில், சங்க விதிமுறைகளை மீறி வியாபாரிகளுக்கு சங்கத்தின் செயலாளர் கடன்

கொடுத்துள்ளதாக மாவட்ட இணைபதிவாளருக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளது. அந்த புகார் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் சங்கத்திற்கு பூட்டு போட்டு போராட்டம் நடத்தப்போவதாக தடப்பள்ளி அரக்கன் கோட்டை பாசன சங்க தலைவர் தளபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து தளபதி கூறும் போது, கடந்த 2011ம்ஆண்டு சங்கத்துடன் நடந்த பேச்சு வார்த்தையின் போது வியாபாரிகளின் கடன் தொகை 20 லட்சம் ரூபாய்க்கு, சங்கத்தில் இருந்து, வருடம் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வட்டி செலுத்தப்பட்டு வருதாக கூறப்பட்டது. விவசாயிகளிடம் சேவை கட்டணம் 6 சதவீதம் வசூலித்து வியாபாரிகளின் கடனுக்கு சங்கம் வட்டி செலுத்துவதாக கூறுவது முறைகேடானது. அப்போது நடந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து வியாபாரிகளுக்கு கடன் வழங்குவதில்லை என்று சங்கத்தின் சார்பில் உறுதி அளிக்கப்பட்டது. சங்கத்திற்கு ஏற்பட்ட ஒன்றரை கோடி ரூபாய் இழப்பு இது வரை வசூலிக்கப்படவில்லை. இந்நிலையில் தற்போது மீண்டும் பல்வேறு வழிகளில் மோசடி நடைபெறுகிறது. மஞ்சளுக்கு இதே சங்கத்தில் சேவை வரியாக 1.5 சதவீதம் மட்டுமே வசூலிக்கப்படும் நிலையில் வாழைக்கு 6 சதவீதம் வசூலிக்கப்படுகிறது. வாழைக்கும் மஞ்சளைப் போல சேவை வரியை 2 சதவீதமாக குறைக்க வேண்டும். அதே போன்று வாழை ஏலத்தில் முறைகேடுகளை தடுக்க நேரடி ஏல முறையை ரத்து செய்து விட்டு மறைமுக ஏல முறையை கொண்டு வர வேண்டும். உடனடி நடவடிக்கை எடுத்து மோசடியில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்காவிட்டால் விவசாயிகளை திரட்டி ஒரு வாரத்தில் கூட்டுறவு சங்கத்திற்கு பூட்டு போட்டு போராட்டம் நடத்துவோம் என்றார்.

**‘உழவன் மஞ்சள் விற்பனை மையம்’ இணையதளம் மூலம் மஞ்சள் ஏலம்**

ஈரோடு, : மஞ்சள் விலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் வகையில் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக மஞ்சளை கொள்முதல் செய்து தரம் பிரித்து இணையதளம் மூலம் ‘இ-ஏலம்‘ விடும் முறை ஈரோட்டில் விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளது. உழவன் மஞ்சள் விற்பனை மையம் என்ற பெயரில் புதிதாக மஞ்சள் விவசாயிகளை அங்கத்தினராக கொண்டு புதிய நிறுவனம் வரும் 10ம் தேதி முதல் துவங்கப்பட உள்ளது.

இதுகுறித்து உழவன் மஞ்சள் விற்பனை மையத்தின் தலைவர் நல்லசாமி, இணைத்தலைவர் வெங்கடேஸ்வரன், ஈரோடு மாவட்ட அனைத்து வியாபாரிகள் சங்க கூட்டமைப்பு தலைவர் சிவநேசன் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மஞ்சளுக்கு போதிய விலை கிடைக்காமல் மஞ்சள் விவசாயிகள் தடுமாறுவதால் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் மஞ்சளை தரம் பிரித்து அவற்றிற்கு நியாயமான விலை கிடைக்கும் வகையில் இ-ஏலம் எனப்படும் புதிய முறை விரைவில் ஈரோட்டில் அறிமுகம் செய்யப்பட உள்ளது. விவசாயிகள் கொண்டு வரும் மஞ்சள் சாம்பிளை நேரில் பார்த்து வியாபாரிகள் விலை நிர்ணயம் செய்து

ஏலத்தில் கலந்து கொள்ளும் முறையே தற்போது அமலில் உள்ளது. இதன் காரணமாக நேரில் வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை குறைந்த அளவிற்கே உள்ளது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட் இந்திய அளவில் புகழ்பெற்றதாக இருந்தும் கூட இங்கு உலக அளவிலும், இந்திய அளவிலும் மஞ்சள் வியாபாரிகள் வந்து ஏலத்தில் பங்கு பெற முடியாத நிலை உள்ளது. விற்பனைக்கு கொண்டு வரப்படும் மஞ்சளை நேரில் பார்க்காமல் எப்படி விலைக்கு வாங்குவது என்று வியாபாரிகள் சந்தேகப்படுவதால் ஏலத்தில் அதிக வியாபாரிகள் கலந்து கொள்ள முடியாமல் போவதும் முக்கிய காரணமாக உள்ளது. எனவே விவசாயிகள் கொண்டு வரும் மஞ்சள் மூட்டையிலுள்ள விரலி, கிழங்கு மஞ்சளின் பெருவெட்டு, சிறுவெட்டு, நடுத்தரம் என இயந்திரங்கள் மூலம் சுமார் 20 ரகங்களாக தனித்தனியே பிரித்து அவற்றிற்கு தரவகை எனப்படும் 'கிரேடு' முடிவு செய்யப்படுகிறது. தரம், நிறம், மணம், அளவு, பண்பு, எடை ஆகியவற்றை பொறுத்து 15 முதல் 20 ரகங்களாக பிரிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கிரேடிலும் உள்ள மஞ்சளுக்கு குறைந்தபட்ச விலையை உழவன் மஞ்சள் விற்பனை மையம் நிர்ணயம் செய்து இ-ஏலத்தில் அறிவிக்கும். இந்த ஏலத்தில் உலகம் முழுவதும் உள்ள மஞ்சள் வியாபாரிகள் கலந்து கொண்டு கிரேடு வாரியாக காட்டப்படும் மஞ்சளுக்கு விலை நிர்ணயித்து ஏலம் கோரலாம். இதன் மூலம் மஞ்சள் விவசாயிகளுக்கு தற்போது கிடைக்கும் விலையை விட 75 சதவீதம் கூடுதலாக விலை கிடைப்பதற்கும் வாய்ப்புள்ளது.

மஞ்சளை தரம் பிரித்து விற்பனை செய்யும் முறையை இந்தியாவிலேயே முதல்முறையாக அறிமுகப்படுத்துகிறோம். தரநிர்ணயம் செய்த பிறகு இணையதளம் மூலமாக ஏலம் விடப்படும். தற்போது சுமார் 60 விவசாயிகள் ஒருங்கிணைந்து இணையதளம் மூலம் மஞ்சள் ஏலம் விடும் முறையை அமல்படுத்துகிறோம். எதிர்காலத்தில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மஞ்சள் விவசாயிகளுக்கு பங்குபத்திரங்களை விற்பனை செய்வதன் மூலம் இந்நிறுவனத்தை விரிவுபடுத்தவும் முடிவு செய்துள்ளோம். இந்நிறுவனத்தில் விவசாயிகள் மட்டுமே பங்கு பெற வேண்டும் என்ற விதிமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மஞ்சள் மட்டுமின்றி எள், நிலக்கடலை, நெல் போன்ற விளைபொருட்களையும் இதே முறையில் விவசாயிகள் மூலமாக விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். முதற்கட்டமாக விவசாயிகளிடம் இருந்து வாங்கப்படும் 500 டன் மஞ்சளை இருப்பு வைப்பதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுதவிர இருப்பு வைக்கும் மஞ்சளுக்கு வங்கிகள் மூலம் பொருளீட்டு கடன் பெற்று தரவும் நடவடிக்கை எடுக்கப்படும். வரும் 10ம் தேதி ஈரோடு வாட்டர் ஆபீஸ் ரோட்டிலுள்ள உழவன் உற்பத்தியாளர் கம்பெனி வளாகத்தில் நடைபெறும் துவக்கவிழாவில் உழவன் மஞ்சள் விற்பனை மையத்தை வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன் திறந்து வைக்கிறார்.

பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம், வருவாய்துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் சந்தீப் சக்சேனா, கலெக்டர் சண்முகம் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானியில் உயிர் தண்ணீர் திறப்பு

ஈரோடு, : கீழ்பவானி பாசனத்துக்கு நேற்று காலை தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பவானிசாகர் அணை யில் இருந்து கீழ்பவானி பாசனத்துக்குட்பட்ட இரண்டாம் மண்டலத்துக்கு மொத்தம் 41 நாட்கள் கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்க திட்டமிட்டு கடந்த டிசம்பர் 5ம் தேதி முதல் 20ம் தேதி வரை முதல்சுற்றுக்கு பொதுப்பணித்துறையினர் தண்ணீர் திறந்து விட்டனர். அணையில் போதிய நீர்இருப்பு இல்லாததால் 2 மற்றும் 3ம் சுற்றுக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. நீர்மின் அணை களில் இருந்து தண்ணீர் பெற்று கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்க உத்தரவிடுமாறு கீழ்பவானி பாசன விவசாயிகள் சென்னை ஐகோர்ட் டில் தொடர்ந்த வழக்கில், நீர்மின் அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என அரசு விளக்கம் அளித்தது.

இந்நிலையில், விவசாயிகள் ஆர்ப்பாட்டம் செய்வதாக அறிவித்ததை தொடர்ந்து பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம் நீர்மின் அணைகளில் இருந்து தண்ணீர் பெற்று கீழ்பவானி பாசனத்துக்கு 6ம் தேதி (நேற்று) முதல் தண்ணீர் திறப்பதாக விவசாயிகளுக்கு உறுதியளித்தார். இதைதொடர்ந்து கடந்த சில நாட்களாக நீலகிரி மாவட்டத்தின் நீர்மின் அணைகளான குந்தா, பில்லூர், பைக்காரா அணைகளில் இருந்து தண்ணீர் பெறப்பட்டு பவானிசாகர் அணையில் தண்ணீர் நிரப்பப்பட்டு வந்தது. கடந்த 2 நாட்களில் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்தது. அணையில் மொத்தம் 3 டிஎம்சி., நீர்இருப்பு உள்ளது.

இந்நிலையில் நேற்று காலை 8 மணிக்கு பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் 500 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. உயிர் தண்ணீரால் 2ம் மண்டல பாசனத்துக்குட்பட்ட 1 லட்சத்து 3500 ஏக்கர் நிலங்கள் பயன் அடையும். 2ம் பாசனத்திற்கான தண்ணீர் 11 நாட்கள் திறந்து விடப்பட உள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 43.68 அடியாக இருந்தது. அணையில் 3.09 டிஎம்சி நீர் இருப்பு உள்ளது. அணைக்கு 1683 கனஅடி தண்ணீர் வரத்து உள்ளது. அணையில் இருந்து ஆற்றின் வழியே 200 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.வாய்க்காலில் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்படும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 10 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டு விலை நிலவரம், விற்பனை நிலவரம் பற்றி ஆலோசித்தனர். இதை தொடர்ந்து, முட்டை

பண்ணைக் கொள்முதல் விலையில் 10 காசுகள் உயர்த்தி ஒரு முட்டையின் விலை 355 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

மற்ற மண்டலங்களில் முட்டை விலை உயர்வு, தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை அதிகரிப்பு போன்ற காரணங்களால் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முட்டைக் கோழி விலை ரூ.40 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி விலை ரூ.82 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

**வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் முறைகேடு**

கோபி, : கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் விவசாயிகளை திரட்டி கூட்டுறவு சங்கத்திற்கு பூட்டு போட்டு போராட்டம் நடத்தப் போவதாக விவசாய சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

கோபி மொடச்சூர் சாலையில் கோபி வேளா ண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்தில் வாரம் தோறும் இரு முறை வாழைத்தார் ஏலம் நடைபெறுவது வழக்கம். இங்கு நடைபெறும் ஏலத்தில் கலந்து கொள்ளும் வியாபாரிகள் ஏலம் நடைபெறுவதற்கு முன்பே முன்வைப்பு தொகை செலுத்த வேண்டும். அதன் பின்னர் நடைபெறும் ஏலத்தில் தாங்கள் செலு த்திய பணத்திற்கேற்ப மட்டுமே ஏலம் கேட்க முடியும். ஏலத்தில் கூடுதல் விலைக்கு வாழைத்தார்களை வாங்கினால் அதற்குரிய பணத்தையும் சங்க அலுவலகத்தில் செலுத்திய பிறகே வாழைத்தார்களை பெற்றுச் செல்ல முடியும். விவசாயிகளுக்கு ஏலம் முடிந்த உடனே பணம் கொடுக்க வேண்டும் என்பதால் வியாபாரிகள் ஏலம் முடிந்த உடனே முழுத்தொகையையும் செலுத்த வேண்டும் என சங்கத்தில் விதிமுறைகள் உள்ளது. இந்நிலையில், சங்க விதிமுறைகளை மீறி வியாபாரிகளுக்கு சங்கத்தின் செயலாளர் கடன் கொடுத்துள்ளதாக மாவட்ட இணைபதிவாளருக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளது. அந்த புகார் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் சங்கத்திற்கு பூட்டு போட்டு போராட்டம் நடத்தப்போவதாக தடப்பள்ளி அரக்கன் கோட்டை பாசன சங்க தலைவர் தளபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து தளபதி கூறும் போது, கடந்த 2011ம்ஆண்டு சங்கத்துடன் நடந்த பேச்சு வார்த்தையின் போது வியாபாரிகளின் கடன் தொகை 20 லட்சம் ரூபாய்க்கு, சங்கத்தில் இருந்து, வருடம் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வட்டி செலுத்தப்பட்டு வருதாக கூறப்பட்டது. விவசாயிகளிடம் சேவை கட்டணம் 6 சதவீதம் வசூலித்து வியாபாரிகளின் கடனுக்கு சங்கம் வட்டி செலுத்துவதாக கூறுவது முறைகேடானது. அப்போது நடந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து

வியாபாரிகளுக்கு கடன் வழங்குவதில்லை என்று சங்கத்தின் சார்பில் உறுதி அளிக்கப்பட்டது. சங்கத்திற்கு ஏற்பட்ட ஒன்றரை கோடி ரூபாய் இழப்பு இது வரை வசூலிக்கப்படவில்லை. இந்நிலையில் தற்போது மீண்டும் பல்வேறு வழிகளில் மோசடி நடைபெறுகிறது. மஞ்சளுக்கு இதே சங்கத்தில் சேவை வரியாக 1.5 சதவீதம் மட்டுமே வசூலிக்கப்படும் நிலையில் வாழைக்கு 6 சதவீதம் வசூலிக்கப்படுகிறது. வாழைக்கும் மஞ்சளைப் போல சேவை வரியை 2 சதவீதமாக குறைக்க வேண்டும். அதே போன்று வாழை ஏலத்தில் முறைகேடுகளை தடுக்க நேரடி ஏல முறையை ரத்து செய்து விட்டு மறைமுக ஏல முறையை கொண்டு வர வேண்டும். உடனடி நடவடிக்கை எடுத்து மோசடியில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்காவிட்டால் விவசாயிகளை திரட்டி ஒரு வாரத்தில் கூட்டுறவு சங்கத்திற்கு பூட்டு போட்டு போராட்டம் நடத்துவோம் என்றார்.

**செயல்படாமல் கிடந்த அரசு விதைப்பண்ணை மீண்டும் செயல்பட நடவடிக்கை**

திருப்பூர்,: பொங்கலூர் அருகே 4 ஆண்டுகளாக செயல்படாமல் கிடந்த அரசு விதைப்பண்ணையை மீண்டும் செயல்பட கலெக்டர் கோவிந்தராஜ் நடவடிக்கை மேற்கொண்டார்.

பொங்கலூர் அருகே தேவனாம்பாளையத்தில், 39 ஏக்கரில் அமைந்திருக்கும் அரசு விதைப் பண்ணையில் தரமான நெல் தரமான நெல், சிறு தானியங்கள், பயிறு வகைகள், எண்ணை வித்து மற்றும் பருத்தி விதைகளை உற்பத்தி செய்து வந்தனர். இந்த பண்ணையில் சிறிய விதை சுத்திகரிப்பு நிலையமும் உள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக இந்த விதைப் பண்ணை செயலற்றுள்ளது. இங்குள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தில், இப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் விதைகள் சுத்திகரிப்பு செய்து வழங்கப்பட்டு வந்தன. பி.ஏ.பி.பாசனத்தை சார்ந்து இருக்கும் இப்பண்ணையில் ஆட்கள் பற்றாக்குறை, கூலி நிர்ணயம், சில நிர்வாகக் காரணங்களாலும் இங்கு பணிகள் நடைபெறாமல் உள்ளன. இந்நிலையில் மாவட்ட கலெக்டர் கோவிந்தராஜ், அரசு விதைப்பண்ணையில் ஆய்வு செய்தார். மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதித் திட்டப் பணியாளர்கள் மூலமாக இப்பண்ணையில், அனைத்து வகையான மர நாற்றுகளையும் உற்பத்தி செய்யுமாறு கலெக்டர் அறிவுறுத்தினார். இதன்தொடர்ச்சியாக அரசு விதைப் பண்ணையில் பயிர் சாகுபடி திட்டங்கள் படிப்படியாக தொடங்கப்பட்டு, முழு செயல்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கலெக்டர் தெரிவித்துள்ளார்.